


නාවෙලි NAAVELI

# நாவெளி

நாவிதன்வெளி பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்

නාවිදන්වෙලි ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මාසික ඉ - සඟරාව

NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E-MAGAZINE

www.navithanveli.ds.gov.lk ds@navithanveli.ds.gov.lk DSNavithanveli 0755424333

மலர்: 18 ✦ இதழ்: 49 ✦ 2025ஆம் வருடம் ✦ ஆனி மாதம் ✦ இருபத்தைந்தாம் திகதி

# நெகிழி மாசுபாட்டை முடிவுக்கு கொண்டுவருதல்




உற்பத்திக் கண்காட்சியும் மகளிர் அபிவிருத்தியும் 14

உகந்தை முருகன் ஆலய வருடாந்த சிரமதான நிகழ்வு 15

காணி உத்தரவுப்பத்திரங்கள் வழங்கி வைப்பு 16

மீள் வாழ்வளிக்கும் சுசிலம் பவுண்டேசன். 30

| | |
|---|---|
| அபிவிருத்திப் பாதையில் | 04 |
| பொருண்மியம் | 06 |
| கதைச்சாளரம் | 08 |
| தேகாரோக்கியம் | 10 |
| முதலாம் பக்கத்தொடர் | 12 |
| பெண்ணியம் | 18 |
| மானுடம் | 21 |
| அறிவுக் களஞ்சியம் | 22 |
| வாசகர் ஆக்கம் | 23 |
| குறுக்கெழுத்துப் போட்டி | 24 |
| சட்டம் | 25 |
| உலக அரசியல் | 27 |
| விசேட தொகுப்பு | 29 |
| சுற்றுச்சூழல் | 33 |
| மருத்துவமும் நாமும் | 35 |
| கல்வி | 37 |
| கவிதைச்சாரல் | 45 |
| படலையைத் தேடி | 47 |

# ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் - 18 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் அளவற்ற மகிழ்ச்சி. ஒரு வருடம் கடந்த நிலையில், இவ்வருடத்தின் ஆறாவது மலராக பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர்-18 இம்மாதமும் உங்களுக்காக வெளிவருகின்றமை மகிழ்வளிக்கின்றது. இத்தகைய மகிழ்வினைத் தந்து கொண்டிருக்கும் "நாவெளி" இன் வாசகர்கள் அனைவருக்கும் அன்பான நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போதைய யுத்தத்திற்கும், சிறுவர்களுக்கும் இடையே உள்ள உறவு என்பது மிகவும் வேதனைக்கு உரியது. யுத்தத்தினால் சிறுவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். அவர்கள் கல்வியை இழப்பதுடன், உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள். மேலும், அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து, பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கிறார்கள். சிறுவர்கள் மீதான யுத்தத்தின் தாக்கம் வேதனைமிக்கது.

கல்வி இழப்பு: யுத்தத்தின் காரணமாக பாடசாலைகள் மூடப்படுவதால், சிறுவர்கள் கல்வியை இழக்கிறார்கள். இது அவர்களின் எதிர்காலத்தை பாதிக்கிறது.

உடல் ரீதியான பாதிப்பு: யுத்தத்தில் சிறுவர்கள் காயமடைவதுடன், உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. குண்டுகள் வெடிப்பு, துப்பாக்கி சூடு போன்ற சம்பவங்களால் சிறுவர்கள் உடல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

உளவியல் ரீதியான பாதிப்பு: யுத்தத்தின் கொடூரங்களை நேரில் பார்ப்பதால், சிறுவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள். பயம், பதட்டம், மன அழுத்தம் போன்ற பிரச்சினைகளால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

குடும்ப சூழல் பாதிப்பு: யுத்தத்தில் பெற்றோரை இழப்பது, குடும்பங்கள் இடம்பெயர்வது போன்ற காரணங்களால் சிறுவர்களின் குடும்ப சூழல் பாதிக்கப்படுகிறது. இதனால், அவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான சூழல் இல்லாமல் போகிறது.

சமூகத்தில் பாதிப்பு: யுத்தத்தின் காரணமாக சமூகத்தில் வன்முறை பரவுவதால், சிறுவர்கள் பாதுகாப்பற்ற சூழலில் வளர்கிறார்கள்.

சிறுவர்களின் உரிமைகள்: சிறுவர்கள் அனைவரும் கல்வி, பாதுகாப்பு, மற்றும் அடிப்படை தேவைகளைப் பெறும் உரிமையுடன் பிறக்கிறார்கள். யுத்தம் இந்த உரிமைகளைப் பறிக்கிறது. எனவே, சிறுவர்களை பாதுகாக்க வேண்டியது அனைவரது கடமையாகும். குறிப்பாக, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உளவியல் ரீதியான ஆதரவு மற்றும் கல்வியை உறுதி செய்ய வேண்டும்.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்: யுத்தத்தில் சிறுவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அவர்களுக்கு பாதுகாப்பான இடங்களை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

உளவியல் ரீதியான ஆதரவு: யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உளவியல் ரீதியான ஆதரவு அளிக்கப்பட வேண்டும். சிறுவர்கள் கல்வியைத் தொடர, அவர்களுக்கு பாடசாலைகளை மீளத் திறத்தல் வேண்டும்.

சமூகத்தில் மறுவாழ்வு அளித்தல்: யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சமூகத்தில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப, மறுவாழ்வு அளித்தல் அவசியம்.

தற்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே, சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை மட்டுமின்றி, ஒவ்வொரு தனிமனிதனின் கடமையுமாகும்.

என்றும் அன்புடன்
ஆசிரியர்.



# நாவிதன்வெளி பிரதேசத்தின் பொன் வயல்கள்

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள நாவிதன்வெளி பிரதேசமானது கூடுதலான விவசாய நிலங்களை தன்னகத்தே கொண்ட சொர்க்க பூமி ஆகும். இங்கு மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயத்தினை பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலக நிருவாகப் பிரிவானது **17262.85** ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்டுள்ளது. இதில் **9392** ஏக்கர் பெரும்போக நெற்செய்கைக் காணியையும், **8956.5** ஏக்கர் சிறுபோக நெற்செய்கைக் காணியையும் கொண்டமைந்துள்ளதோடு இவை **35** விவசாயக் கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் **7969** குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களில் **4545** விவசாயக் குடும்பங்கள் ஆகும். இங்குள்ள இளைஞர்கள் பெரும்பாலானோர் விவசாயத்தினைக் பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். இதனால் விவசாய சமூகத்தினரின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதோடு தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர்கள் வருமானத்திற்காக வேறு தொழிலினை நாட வேண்டிய தேவை ஏற்படுவதில்லை.

இப்பிரதேச விவசாயிகள் பெரும்போக மற்றும் சிறுபோக நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். சித்திரை தொடக்கம் ஆடி மாதம் வரையும் சிறுபோக நெற்செய்கையிலும் ஐப்பசி மாதம் தொடக்கம் மாசி மாதம் வரை பெரும் போக நெற்செய்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் விவசாய நடவடிக்கையினை ஊக்குவிக்கும் பொருட்டு கமநல சேவைகள் திணைக்களத்தினால் ஒவ்வொரு போகத்திற்கும் உரமானியம் மற்றும் ஆலோசனைகள் விவசாயப் போதனாசிரியரின் உதவியுடன் வழங்கப்படுகின்றன.

நெற்செய்கையினை மேற்கொள்வதற்கு மழைநீரினை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். அத்தோடு சிறுபோகத்திற்கு ஆறுகள், குளங்கள், வாய்க்கால்கள், மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசன திட்டங்களின் மூலமும் விவசாய நடவடிக்கைக்கு தேவையான நீரினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இப்பிரதேசத்தில் **BG 357, 94-1, AT 362, BG 360, BG 377** போன்ற நெல்லினங்கள் கூடுதலாக பயிரிடப்படுகின்றன. ஒரு ஏக்கருக்கு அண்ணளவாக **35** தொடக்கம் **40** மூடை நெல்லினை விவசாயிகள் அறுவடை செய்கின்றனர். இவ்வாறான விவசாய நடவடிக்கையின் போது பல்வேறுபட்ட சவால்களை எதிர் நோக்குகின்றனர். கோடைவெயிலின் தாக்கத்தினால் பயிர்கள் கருகிப்போதல், வரட்சியினால் பயிர்ச்செய்கைக்கு போதியளவு நீர் கிடைக்காமை, உரப்பற்றாக்குறை அல்லது உரங்களின் விலை உயர்வு, பீடைப்பூச்சிகளின் தாக்கம், பறவைகள், ஆடு, மாடு, யானை போன்ற கால்நடைகளினால் ஏற்படும் சேதங்கள், தாழ்வு நிலப்

பிரதேசமாகையால் ஒவ்வொரு வருடமும் ஏற்படும் வெள்ளப்பெருக்கின் போதும் கூடுதலான பாதிப்புக்களை விவசாயிகள் எதிர்நோக்குகின்றனர்.இவற்றை விட தங்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு போதிய மூலதனம் விவசாயிகளிடம் இல்லாத காரணத்தினால் கடனடிப்படையிலேயே களை கொல்லி, கிருமி நாசினி உரம் மற்றும் வேலையாட்களுக்கான செலவு போன்றவற்றை பெற்றுக் கொள்வதால் இவர்களுக்கு போதிய இலாபம் கிடைப்பதில்லை.

அனர்த்தங்கள் ஏற்படும் போது எமது பிரதேச செயலகத்தில் விவசாய அமைச்சின் கீழ் பணியாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களினாலும், கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர்களினாலும் விவசாய பரிசோதகர்களினாலும் களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பயிர்களின் சேதங்கள் குறித்து கமநல சேவைகள் திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதற்கிணங்க சேதங்களின் அளவீடுகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கமநல காப்புறுதி திணைக்களத்தினால் நட்டஈடு வழங்கப்படுகின்றது.

பிரதேசத்தில் மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்களங்களின் வாய்க்கால்கள், அணைக்கட்டுகள், துருசு, வீதிகள் போன்றன செப்பனிடப்படாமல் காணப்படுவதனால் நீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர் கொள்கின்றனர். அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக போதிய நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டால் எதிர் காலத்தில் நீர்ப்பாசனம் தொடர்பான விவசாயிகளின் பிரச்சினை தீர்க்கப்பட்டு இப்பிரதேசம் பொன் விளையும் பூமியாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது. விவசாயிகளின் பாரிய பிரச்சினையாக காணப்படுவது மூலதனப் பற்றாக்குறையாகும். அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் குறைந்த வட்டியில் விவசாயக்கடன்களை வழங்குகின்றன. ஆனால் அரச தொழில் செய்யும் பிணையாளிகளின் தேவை, காணி உறுதிகளின் தேவை மற்றும் விவசாயிகளுக்கான போதிய விழிப்புணர்வின்மை போன்ற காரணங்களினால் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் விவசாய கடன்களைப் பெறாமல் அரிசி ஆலைகளின் உரிமையாளர்களிடமும் களைநாசினி உரிமையாளர்களிடமும் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். இப் பிரதேசத்திற்குரிய அரச வங்கிகள் விவசாயிகளின் நிதித் தேவையினை பூர்த்தி செய்யும் பட்சத்தில் இப் பிரதேச மக்கள் நிதிப்பற்றாக்குறையில் இருந்து மீட்சியடைவர்.

இவ்வாறான சவால்களை எதிர்நோக்குகின்ற போதிலும் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லானது சந்தைப்படுத்தலின் போது விளைபொருட்களுக்கு எதிர்பார்க்கின்ற நியாயமான விலை கிடைக்காமை விவசாயிகளிடையே அதிருப்தியினை ஏற்படுத்தி விடுகின்றது. எமது பிரதேசத்தில் காணப்படும் 25 அரிசி ஆலைகளையும் மையமாக கொண்டு அறுவடையின் மூலம் கிடைக்கப்பெறும் நெல்லினை உரிய முறையில் சந்தைவாய்ப்பினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இப் பிரதேச மக்கள் பாரம் பரிய முறையிலேயே விவசாயத்தை மேற்கொள்கின்றனர். காலநிலை மாற்றம் நவீன தொழில் நுட்பங்களைக் கருத்தில் கொள்ளாததனால் விளைச்சல் குறைவடையும் நிலை இங்கு காணப்படுகின்றது. நெல் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடன் சீரான நீர்ப்பாசனம் மற்றும் இயந்திரமயமாக்கல் மூலம் அதிக விளைச்சலைப் பெற முடியும். அத்தோடு நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தக் கூடிய பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கமநல சேவைகள் திணைக்களத்தின் விவசாய பரிசோதகர்களினால் நடாத்துவதன் மூலம் ஊக்குவிக்க முடியும்.

கிராம மட்டங்களில் இவ்வாறான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதனால் எமது பிரதேச செயலாளர் பிரிவில் விவசாய நடவடிக்கையினை மேலும் வலுப்பெறச் செய்ய முடியும். அத்தோடு பிரதேச அபிவிருத்தியிலே எமது தேசிய அபிவிருத்தியும் தேசிய பொருளாதார விருத்தியும் தங்கியுள்ளன. எனவே மேற்குறித்த நவீன உத்திகளை கையாள்வதன் மூலம் விவசாய நடவடிக்கைகளில் இன்னும் கூடுதலான விளைச்சலை பெற்றுக் கொள்ள முடிவதோடு பொன் விளையும் பூமியாகவும் மாற்றிக்கொள்ள முடியும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

**தொகுப்பு :**
**Mrs. Gajenthini Manivannan - Development Officer.**
**(Under the Guidance of Mrs.T.Kirupairajah, Deputy**

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...




# ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2025 – 2029

### 7.2 மாற்று வருமான வழிகளின் பொருட்டு கிராம மக்களை ஈடுபடச் செய்தல்

கிராம மக்கள் மத்தியில் நிலவும் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றாக அவர்களின் ஆற்றலை அடையாளம் கண்டு பிரதேசத்திலுள்ள வளங்களைப் போற்றக் கூடிய மட்டத்தில் பயன்படுத்துவதனூடாக மாற்று வருமான வழிகளில் ஈடுபடச் செய்வதில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். உதாரணம் அரசுக்குச் சொந்தமான தகுதியான காணிகளில் விவசாயம்,மீன்பிடி மற்றும் கால்நடைவளர்ப்பு நடவடிக்கைகளுக்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல், கூட்டுப்பண்ணைகளை நிறுவுதல், இடைக்கால போகப் பயிர்செய்கைக்கு வசதிகளை வழங்குதல், கூரைகளில் சூரிய மின்கலங்களினையும் பொருத்துதல் முழு நேரத் தொழில் அல்லது கைத்தொழில்களில் ஈடுபடாத ஆட்களை மாற்று வருமான வழிகளில் ஈடுபடச் செய்தல்.

### 7.3 வேலை வாய்ப்புத் தொடர்பான திறனையும் ஆற்றலையும் மேம்படுத்துதல்

தற்போது ஏதேனும் ஒரு தொழில் முயற்சியில் தொழிலில் ஈடுபடுவோர்களின் பொருட்டும் புதிதாக அத்துறைகளில் இணைய உத்தேசிக்கும் குழுக்களுக்குத் தேவையான திறன்களைக் கட்டியெழுப்பி அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

பெண்கள், இளைஞர்கள், அங்கவீன நபர்கள் உட்பட மற்றும் வறிய ஒதுக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமையினை வழங்கி புதிய பயிர்செய்கை முறையினை அறிமுகப்படுத்துதல். தொழில்

முயற்சியாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்தல், தலைமைத்துவ திறமைகளை மேம்படுத்துதல், சட்ட ரீதியான வலுவூட்டல் ஊடாக கிராமப்புற மக்களின் அறிவு, திறமை மற்றும் ஆற்றல்களை மேம்படுத்துவது தொடர்பில் கவனத்தினை செலுத்துதல் வேண்டும். அங்கு பிரிவில் உள்ள சிரேஸ்ட பிரஜைகளின் அனுபவத்தினை பரிமாற்றவும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

### 7.4 மக்கள் முகங்கொடுக்கும் சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவுதல் மற்றும் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளல்

தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக கிராமிய மக்களின் பொருளாதார பிரச்சினைகள் மட்டுமன்றி ஏனைய சமூகப் பிரச்சினைகளுக்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளல் மற்றும் தேவையான உதவிகளை வழங்குவது தொடர்பில் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகளினைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களை (உளவளத்துணை விழிப்புணர்வூட்டல், ஆன்மீக அபிவிருத்தித் திட்டங்கள்) மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

### 7.5 அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

கிராமிய மற்றும் பெருந்தோட்ட பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளில் (மின்சாரம், பாதுகாப்பான குடிநீர், வீடுகள், நுழைவுப்பாதை போன்றவை) நிலவும் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக அவர்களின் வாழ்க்கைத் தரமானது கீழ் மட்டத்தில் உள்ளது. தமது வாழ்வாதார மேம்பாட்டிலும் அன்றாட செயற்பாடுகளின் போதும் உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக இம்மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதுடன் அத்தேவைகளினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கருத்திட்டங்களை இனங்காண எதிர்பார்க்கப்படுகின்றது.

### 7.6 சுற்றாடல் பாதுகாப்பு

கிராமியப் பகுதிகளில் காணப்படும் நீர் ஊற்றுக்கள், நீர்நிலைப் பகுதிகள், வனப் பரம்பல் மற்றும் காடுகளைப் பாதுகாத்தல் வீதிகளின் இருமருங்கிலும் மரம் வளர்த்தல்,கழிவு முகாமைத்துவம் போன்றவற்றின் பொருட்டு பொருத்தமான கருத்திட்டங்களை இனங் காண்பதற்கும் மக்கள் பங்களிப்பினை செயற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோல வன விலங்குகளின் மூலம் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்கும் பொருத்தமான சுற்றாடல் நேயமிக்க முறைகளை இனங்காண்பதற்கும் சுற்றாடல் சமநிலையினை மீள ஆரம்பிப்பதற்குமான சுற்றாடல் தொகுதி ஒன்றினைத் தாபிப்பதும் முன்வைக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு:
எம்.எச். ஜலிலா
அபிவிருத்தி உத்தியோகத்தர்

மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்:
எம்.ஐ. அலியார்
சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்



## சிறுகதை

# காலம் கற்றுத் தந்த பாடம்

நிலாப்பெண் வெள்ளோவியமாக வானக்கடலில் மூழ்குவதும் எழுவதுமாக விந்தை செய்து கொண்டிருந்தாள். இருள் சூழ்ந்திருந்த என் மனமும் விடியலை நோக்கி தவள எத்தனிக்கும்போது இன்று புனர்வாழ்வு இல்லத்துக்கு வருகை தந்த அந்த பெண்மணியின் பார்வை என்னை அக்கினிப் பிளம்பாக எரித்துக் கொண்டிருந்தது. நிச்சயமாக சொல்வேன் அது வெறுமையை ஒன்று திரட்டி என்மீது காறி உமிழ்ந்த பார்வை. அப்பெண்மணி என்னைத் தெரிந்தவராக இருந்திருக்க வேண்டும். அந்த பார்வையின் அர்த்தத்தை புரிந்து கொள்ள மூளைக்கு வேலை கொடுத்தபோது கலாபவன் சேர் நினைவில் வந்து நின்றார். அதற்கு மேல் பொறுமையில்லாத என் கால்கள் புனர்வாழ்வு நிலைய பொறுப்பாளர் கலாபவன் சேரின் அறையை நோக்கி ஓடியது. நிலாவுடன் ஏதோ பேசி எழுதிக் கொண்டிருந்த அவர் என்னை அந்த நேரத்தில் கண்டதும் ஆச்சரியத்துடன் "என்ன சுயன் ஏதாவது வேணுமா?" வழமையான கவனிப்புடன் கேட்டார்.

எப்படி தொடங்குவது என்பதில் வார்த்தை சிக்கித் தவித்தாலும் அவரது அன்பான உபசரிப்பில் கண்கள் குளமாகி நின்றேன். கடந்த மூன்று மாதமாக அன்பு என்ற ஒன்று வாழ்கின்றது என்றால் அதில் முதலிடம் அவருக்கு உண்டு.

தட்டுத்தடுமாறி "நான் யார்?" என்ற கேள்வியுடன் விடயத்துக்கு வந்தேன். உரிமையுடன் அவர் கூறிய விடயங்களின் உண்மைகள் கசக்க உறைந்து போயிருந்தேன்.

தீவிர குடும்ப வன்முறையில் தினம் தினம் என் தந்தையிடம் வதை பட்டுக்கொண்டிருந்த என் தாய் நான் பிறந்தபோது இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டாள். தந்தையின் தொடர்பே இல்லாமல் போக அனாதையாக்கப்பட்ட என்னை சட்டமுறைப்படி தத்து எடுத்துக்கொண்டவர்களே என்னை வளர்த்த பெற்றோர்கள்.

இத்தனை காலம் இந்த உண்மையை எனக்கு உணர்த்தாமலே என்னை வளர்த்த என் பெற்றோர்கள் தெய்வமாக கண்முன் வந்து நின்றார்கள். தம்பி என்று பாசமாக அழைத்ததைத் தவிர என்னைப் பெயர் சொல்லிக்கூட அவர்கள் அழைத்திருக்கவில்லை. பாசமான என்சகோதரிகள் என எல்லோரும் கண்முன் வந்து நின்றார்கள். கலாபவன் சேர் மேலும் கூறிக்கொண்டே போனார்.

"உன் பெற்றோர்களின் கையைமீறி உன் நட்புவட்டம் உன்னை இழுத்துக் கொண்டு போய்க்கொண்டிருக்க நீ போதைப்பொருளுக்கு அடிமையாகியிருந்தாய்." தீக்குள் விரலைவிட்ட வேதனை எனக்குள் ஊடுருவத் தொடங்கியது.

நான் ஆறு மாத சிகிச்சைக்காக இங்கிருப்பது தெரிந்த விடயமே. ஆனால் அதன் பின்னணியை நான் உணர முடியாதிருந்திருக்கிறேனே..! என் அத்தனை விடயங்களையும் அறிந்து கொள்ள அவரிடம் மண்டியிட்டேன்.

ஒருவன் தன்னைப்பற்றி அறியும்போது முழுமை பெறுவான் என்ற நம்பிக்கையுடன் அவரும் உண்மைகளை இறக்கி வைத்துவிட்டார். என் போதைப்பொருள் பாவனையினால் அந்த பாரிய துன்புறுத்தலுக்கு நான் காரணமாயிருந்திருக்கிறேன் என்பது எனக்கு பேரிடியாக இருந்தது.

ரஸ்மி பக்கத்து வீட்டுப் பெண். அழகு, அறிவு, குணம் என எல்லோராலும் பாராட்டக்கூடிய தரம் 13இல் சாதித்துக் கொண்டிருக்கும் மாணவி. இரு வீட்டுப் பழக்கத்தினால் அவள் நட்புடன் என் வீடு வந்து செல்வது

வழமையாயிருந்தது. நட்பைத் தாண்டிய எண்ணம் யார் மனதிலும் அன்று இருக்கவில்லை. போதைக்கு தெரியவில்லை அவள் பேதை என்று. ஏதேதோ வன்செயல்கள் நினைவில் வந்து போக வேண்டாம் அண்ணா... வேண்டாம் அண்ணா... ரஸ்மியின் கதறல் மட்டும் நினைவில்வர தலையில் நரம்புகள் சிதறிவிடுவது போல வலித்தது. தலையைப் பிய்த்துக் கொண்டேன். என்னை ஆற்றுப்படுத்தி கலாபவன் சேர் மேலும் கூறிய விடயங்களில் கூனிக்குறுகிப்போய் நிற்கின்றேன்.

உன் வன்செயலால் ரஸ்மி பாடசாலை இடைவிலகி மூன்று மாத கர்ப்பவதியாக ஒரு இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறாள். நீதிமன்ற கட்டளையில் தான் நீ இங்கு புனர்வாழ்வு பெற்று வருகின்றாய். ரஸ்மி பதினெட்டு வயதுக்கு குறைந்தவள் என்பதாலும் இரு வீட்டு மரியாதையையும் காப்பாற்றும் நோக்கில் நீங்கள் இருவரும் காதலித்ததால் விருப்பத்துடனே இவ்விடயம் நடந்தது என கூறியதால் உன் தண்டனைகள் குறைக்கப்பட்டிருக்கிறன. நீ மனம் திருந்தி வாழ வாய்ப்பு உள்ளது, என சொல்லிக்கொண்டே போனவர் காலில் விழுந்து தேம்மி தேம்பி அழுதேன்.

'குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து'

என்பது போல என் மதிகெட்ட செயலால் இரு குடும்பமும் எத்தனை அவமானங்களை சுமந்திருப்பார்கள். கலாபவன் சேர் எத்தனை ஆற்றுப்படுத்தல்களை வழங்கினாலும் என் மனம் ஆறவில்லை. உள்ளக்கிடக்கையை கொட்டித்தீர்த்து காகிதமாக்கினேன். எப்படியாவது இரு வீட்டுக்கும் சேர்ப்பித்திட வேண்டும் என்ற முடிவோடு கலாபவன் சேரிடம் சென்றேன். அவர் தொலைபேசியில் பேசிக்கொண்டே சைகையால் அழைக்க அருகில் ஓடினேன். தொலைபேசி மெதுவாக என் காதுகளுக்குள் மாற்றப்பட்டது.

"தம்பி சாப்பிட்டானா... தூங்கினானா... மருந்து போட்டுக் கொள்கிறானா... அந்த குரல் அவன் பெற்றோருக்கு சொந்தமானது. அம்மா..என்ற ஒற்றை சொல்லில் கதறி அழுது தீர்த்துவிட்டேன்."

ஆண் என்ற அதிகாரம் எனக்குள் ஊடுருவ என் பெற்றோர் சகோதரிகளுக்கு வீட்டு வன்முறை செய்துவிட்டேன், ரஸ்மியை துன்புறுத்தி பலாத்காரம் செய்து கற்பழித்திருக்கிறேன். அவள் இளவயது தாயாக காரணமாயிருந்திருக்கிறேன். என் தனி ஒருவனின்



செயற்பாட்டால் அவள் நசுக்கப்பட்ட மலராகிவிட்டாளே. சமுதாய முன்னேற்றத்தைச் சீரழிக்கும் இப்போதைப்பொருள் பிடிக்குள் எத்தனை குடும்பங்கள் சிக்குண்டு பாலின அடிப்படையிலான வன்முறைகளை அனுபவிக்கின்றார்கள். இப்பிடியிலிருந்து எம் சமூகத்தை நல்வழிப்படுத்துவேன். என் ரஸ்மி போன்ற பல மாணவிகளின் எதிர்காலம் வன்முறையால் பாதிக்கப்படாமலிருக்க போராடுவேன். என்தந்தையால் பாதிக்கப்பட்ட பெற்றவளைப்போல் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அத்தனை பெண்களுக்கும் விழிப்புணர்வூட்டுவேன். என்னைப் பூமிக்கு தந்த தாய் மீது ஆணையாக என்னுள் பல தீர்மானங்களை பசுமரத்தாணியாக பதித்துக் கொண்டு அக்கடமையை இவ் இல்லத்திலே கலாபவன் சேருடன் இணைந்து செய்ய தயாராகிவிட்டேன்.


பெண்களுக்கெதிரான அனைத்து வன்முறைகளையும் இல்லாதொழிக்க மாற்றம் ஆண்களிடமிருந்து வரவேண்டும். அதற்கு காலம் என்னை வடிவமைத்திருக்கிறது. காலம் தந்த பாடம் இந்த சமூகத்தின் சவால்களை எதிர்கொள்ள என்னை மனிதனாக்கியிருக்கிறது.

சி.சுபாஷினி
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்.

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# நாட்பட்ட தொற்றா நோய்கள் இலங்கை எதிர்கொள்ளும் சுகாதார நெருக்கடி

## (Chronic Non-Communicable Diseases)




ஆரோக்கிய வாழ்வு நிலையங்களில் சோதனைக்கு உட்படுத்தப்படுவதற்கு தகுதியான நபர்களுக்கான 2 பிரிவுகள் பின்வருமாறு:

01. பிரிவு A: 35 வயது அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், குருதி சுற்றோட்ட தொகுதி தொடர்பான நோய்கள் (இருதய நோய், பக்கவாதம், உயர்குருதி அழுத்தம்), நீரிழிவு நோய், புற்று நோய், நாட்பட்ட சிறுநீரக நோய், நாட்பட்ட கல்லீரல் நோய், குருதியில் உள்ள கொழுப்பின் அளவின் ஏற்றத்தாழ்வுகள் போன்ற நோய் நிலைமைகள் அற்ற நபர்கள்.

02. பிரிவு B: 20-34 வயதுக்குட்பட்ட நபர்கள், ஆனால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஆபத்தான காரணிகளைக் கொண்ட நபர்கள்.

* கடந்த ஒரு வருடத்தில் புகையிலை புகைக்கும் பழக்கமுள்ளவர்கள்.

* அதிக எடை (உடல் நிறை குறியீட்டெண் (25 $Kg/m^2$) நிலை உள்ளவர்கள்.

* இடுப்புச் சுற்றளவு கூடியவர்கள் (இடுப்பு சுற்றளவு 90 செ.மீற்றருக்கும் அதிகமான ஆண்கள் அல்லது 80 செ.மீற்றருக்கும் அதிகமான பெண்கள்).

* உயர் குருதி அழுத்தம் (140/90 mmHg).

* நீரிழிவு நோய் அறிகுறிகள் இருத்தல்.

* நெருங்கிய உறவினர் (தாய், தந்தை, உடன்பிறப்புகள் போன்றோர்) குறைந்த வயதில் இருதய நோய்க்கு ஆளாகியிருத்தல் (55 வயதிற்கு குறைந்த ஆண் உறவினர் அல்லது 65 வயதிற்கு குறைந்த பெண் உறவினர்).

* நெருங்கிய உறவினருக்கு நீரிழிவு நோய் இருத்தல்.

* மரபணு மூலத்தால் ஏற்படும் குருதியில் கொழுப்பு நோய் இருத்தல்.

* நாட்பட்ட தொற்றா நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்.

நாட்பட்ட தொற்றா நோய்களின் தாக்கத்தை குறைப்பதற்காக இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உடல் உழைப்பை ஊக்குவித்தல், புகையிலை மற்றும் மது பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஆரோக்கியமான உணவு பழக்கத்தை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும், நாட்பட்ட தொற்றா நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கான வசதிகளையும் அரசு மேம்படுத்தி வருகிறது.





## தனிநபர்களின் பங்கு



நாட்பட்ட தொற்றா நோய்களைத் தடுப்பதில் தனிநபர்களுக்கும் முக்கிய பங்கு உண்டு. ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை பின்பற்றுதல், தவறாமல் உடற்பயிற்சி செய்தல், புகைபிடிப்பதை தவிர்த்தல், மது அருந்துவதைக் குறைத்தல் மற்றும் மன அழுத்தத்தை நிருவகித்தல் போன்ற வாழ்க்கை முறை மாற்றங்களைச் செய்வதன் மூலம் நாட்பட்ட தொற்றா நோய்களின் அபாயத்தைக் குறைக்கலாம்.

இலங்கையில் நாட்பட்ட தொற்றா நோய்கள் ஒரு பாரிய சுகாதார சவாலாக உள்ளது. அரசு, சுகாதார நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் நாட்பட்ட தொற்றா நோய்களின் தாக்கத்தைக் குறைக்க முடியும். ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றுவதன் மூலமும், நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலமும் நாட்பட்ட தொற்றா நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

DR MBM SILMY (MBBS).
MOIC - PMCU CHENAIKUDIYIRUPPU




# முடிவுக்கு கொண்டுவரப்படும் நெகிழி மாசுபாடுகள்

-எம்.எம். ஸீனதுல் ஸிஹ்னாஸ்

உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்த விசேட நிகழ்வுகள் 2025 ஜூன் 05ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் அமைப்பினால் (UN Environment Programme) ஆனி மாதம் 05ஆம் திகதி உலக சுற்றாடல் தினமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதுடன் Ending Plastic Pollution எனும் தொனிப்பொருளில் இவ்வருடத்திற்கான நிகழ்வுகள் உலகம் முழுவதும் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில் பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் நாவிதன்வெளி பிரதேச செயலக சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. எம்.எம். ஸீனதுல் ஸிஹ்னாஸ் அவர்களினால் தெளிவூட்டல் கருத்தரங்கு இடம்பெற்றதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் மரம் நடும் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம் ஆகியோரும் கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய அதிகாரி திரு. ஜீ. சுகுணன், உதவி பணிப்பாளர் வைத்திய அதிகாரி திருமதி. தாஹிரா சபியுதீன் அவர்களும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் திரு. பி. சதீஸ்கரன், உள்ளூராட்சி உதவி உத்தியோகத்தர் திரு. எஸ். கருணாகரன், சவளக்கடை பொலிஸ் நிலைய அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் பிரதேச செயலக வளாகத்தில் மரக்கன்று நடுகையும் இடம்பெற்றது.

மேலும் இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வெளிக்கள மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

குறித்த நிகழ்வினை கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடமை புரியும் Dr.S. ராகுலன் அவர்கள் பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்நிகழ்வினை ஒழுங்கமைப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிகழ்வின் நிழல்கள்




WORLD ENVIRONMENT DAY
Divisional Secretariat,
Navithanveli

# உற்பத்திக் கண்காட்சியும் மகளிர் அபிவிருத்தியும்

-அ.சர்மிலராஜ்

நாவிதன்வெளி மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையப் பயிலுநர்களின் ஆக்கங்களைக் கொண்ட கண்காட்சி நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஆனி மாதம் 05 ஆம் திகதியன்று நாவெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. A. சர்மிலராஜ், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. N. மேரி சுகாசினி, தையல் போதனாசிரியை திருமதி. S. கமலினி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் திரு. கே. இளங்குமுதன் அவர்களும் கௌரவ அதிதிகளாக நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, அம்பாறை மாவட்ட கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். ரி. ஏ. தாகிப் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களின் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் போது, பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட கைப்பணி உற்பத்திப் பொருள்கள், மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் ஏற்ற வகையில் திட்டங்களை ஏற்படுத்த இருப்பதாக பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த கிராமிய அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் திரு. கே. இளங்குமுதன் அவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






















# உகந்தை முருகன் ஆலய வருடாந்த சிரமதான நிகழ்வு

-க.நீலேந்திரன்

உகந்தை முருகன் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு வருடாந்தம் நாவிதன்வெளி பிரதேச செயல்க உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்படும் சிரமதான நிகழ்வு இவ்வருடமும் சிறப்பாக இடம்பெற்றது. பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன் அவர்களின் தலைமையில் 2025 ஜூன் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

இச்சிரமதான நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் திரு. செ. சிவம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.








































# ஒரு தொகை காணி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

-N.M.M. அஸ்லம் சுஜான்

அரசகாணிகளில் ஆவணங்கள் அற்றுக் குடியிருந்தும், பயிர்ச்செய்கையினை மேற்கொண்டும் பராமரித்தும் வரும் விவசாய வகுப்பினைச் சேர்ந்த மற்றும் குறைந்த வருமானம் உடைய பொது மக்களிடம் இருந்து கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் காணி உத்தரவுப் பத்திரங்கள் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தால் இன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

காணி ஆணையாளர் நாயகத்தின் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 2008/04 சுற்று நிருபத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கமைய காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) அம்பாறை அலுவலகத்தினால் கிடைக்கபெற்ற அனுமதியின் அடிப்படையில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள பொதுமக்களுக்கு ஒரு தொகை காணி உத்தரவுப் பத்திரங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களது தலைமையில் 2025.06.25ஆம் திகதி நாவெளி கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. பொதுமக்களின் விண்ணப்பங்களின் அடிப்படையில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடாத்தப்பட்ட காணிக்கச்சேரியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இத்தகைய காணி உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, சவளக்கடை, மத்திய முகாம்-01, மத்தியமுகாம்-02, மத்தியமுகாம்-03, மத்தியமுகாம்-04, மத்தியமுகாம்-05, சாளம்பைக்கேணி - 01, சாளம்பைக்கேணி - 02, சாளம்பைக்கேணி - 03, சாளம்பைக்கேணி - 04, அன்னமலை- 02 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 224 பயனாளிகளுக்கு காணி உத்தரவுப்பத்திரம் வழங்கும் நிகழ்வானது நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022, 2023, 2024ஆம் ஆண்டு தொடக்கம் காணி ஆவணங்களற்றோராகவும், வருடாந்த அனுமதிப் பத்திரங்களையுடையவர்களாகவும், காணிப் பிணக்குகளைத் தீர்த்துக் கொண்ட பொதுமக்களாகவும் இருந்து காணி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்த பொதுமக்களுக்கு என நடைபெற்ற காணிக் கச்சேரிகளில் கிடைக்கப்பெற்ற அனுமதிகளின் பிரகாரம் முதற் கட்டமாக 224 காணி உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன என பிரதேச செயலாளர் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட காணி ஆணையாளர் (மா.இ) திருமதி. I.L. இப்திகாரா பானு கலந்து கொண்டதுடன், சிறப்பு அதிதிகளாக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராஜா, நிருவாக உத்தியோகத்தர் திரு O.G.K. குசுமிந்த, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. சிவம், நிருவாக கிராம உத்தியேகத்தர் திரு மனோஜ் இந்ரஜித், குடியேற்ற உத்தியோகத்தர் திரு. N.M.M. அஸ்லம் சுஜான், காணி வெளிக்களப் போதனாசிரியர் திரு. ச. அன்பழகன், கிராமப் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது, பிரதம அதிதி கருத்துத் தெரிவிக்கையில், காணி ஆவணங்களைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்வது பெரிய விடயம் என்றும், அத்தகைய ஒரு ஆவணத்தினைச் சிலர் பெற்றுக் கொண்ட பின்னர் விற்பனை செய்வது தவறான செயல் என்றும் கூறியதுடன், ஒரு காணிக்கான உரிமைகள், பின்னுருத்து விடயங்கள், சீவிய உருத்து விடயங்கள் தொடர்பில் பொது மக்கள் கவனமெடுத்துச் செயற்பட வேண்டும் என்று கூறியமை மக்களுக்கான தெளிவூட்டலாக அமைந்திருந்தது.


























# தூய்மையான இலங்கை என்ற எண்ணக்கருவுடன் பால்நிலை சமத்துவத்தினை அடைந்து கொள்வோம்.



தூய்மையான இலங்கையின் பிரதான தூண்களான சுற்றுச்சூழல், சமூகம், நெறிமுறை என்பவற்றுடன் பால்நிலை சமத்துவத்தின் தேவையை உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

என்ன வளம் இல்லை நம் தாய்த்திருநாட்டில். நம் நாடு இந்தியப் பெருங்கடலில் ஒரு தீவு நாடாக அமைந்திருந்தாலும் அதன் வளங்கள் அளப்பரியன. இயற்கை வளம், கலாசார வளம், மனிதவளம் எனப் பல்வேறு அம்சங்களால் தன்னிறைவு பெற்று விளங்குகின்றது.

இயற்கை வளமாக தேயிலை, தென்னை, இறப்பர் பயிர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றுகின்றன. அரியவகை மூலிகைகள், வனஉயிரினங்கள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. ஆறுகள், குளங்கள், நீர் வீழ்ச்சிகள் என்பவற்றால் ஓர் நீர்வளம் நிறைந்த நாடு நம் தாய்த்திருநாடு. மகாவலிகங்கை போன்ற ஆறுகள் விவசாயத்திற்கும் நீர்மின்சார உற்பத்திக்கும் உதவுகின்றன. கிராஃபைட், இரத்தினக்கற்கள், தங்கம் போன்ற கனிம வளங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றன. எம்மைச் சுற்றியுள்ள கடல் பல்வகையான மீன்வகைகள், கடல்வாழ் உயிரினங்களைக் கொண்டுள்ளது. இதனால் மீன்பிடித் தொழிலுக்கு முக்கியமான ஆதாரமாக விளங்குகின்றது.

கலாசார வளமாக சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் போன்ற பல்லின சமூகத்தின் கலாசாரங்களைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான கலாசார, பாரம்பரிய கலை வடிவங்கள் உள்ளன.

புராதன நகரங்கள், கோட்டைகள் மற்றும் கோயில்கள் பல வரலாற்றுச் சின்னங்களாக நம் வளமான வரலாற்றை பறை சாற்றுகின்றன. கைவினைப் பொருட்கள், நடனம், இசை மற்றும் நாடகம் போன்றன கலை மற்றும் கைவினை வடிவங்களில் சிறந்து விளங்குகின்றது.

மனித வளமாக அதிக எண்ணிக்கையில் இளைஞர் யுவதிகளைக் கொண்டு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றக்கூடிய வகையில் அதிக எண்ணிக்கையிலான யுவதிகளைக் கொண்ட மனித வளம் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் கல்வியறிவு விகிதம் சிறப்பான விதத்தில் அமைந்துள்ளது. இந்த வளங்கள் நம் நாட்டின் வளர்ச்சிக்கும் செழிப்பிற்கும் கிடைத்த ஆதாரங்கள் அல்லவா!

இவ்வளங்களைக் கொண்டு இன்று பல்துறைகளில் பெண்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவி வருகின்றார்கள். ஆடை உற்பத்தி, விவசாயம், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம் என பல துறைகளில் அவர்கள் தடம் பதித்து விட்டார்கள். பல பெண்கள் தமது சொந்த தொழில்களாக சிறுவணிகங்கள், கைவினைப் பொருள்கள் உற்பத்தி, உணவுபதப்படுத்தல்

தொழில்களை வெற்றிகரமாக நடத்தி வருகின்றார்கள். நிறுவனங்களில் உயர் நிர்வாக பதவிகளை வகித்து சிறந்த தலைமைத்துவத்துடன் நாட்டின் வளர்ச்சிக்கு செயற்படுகின்றார்கள். வீட்டுப்பணி, செவிலியர்பணி என வெளிநாடுகளில் குறிப்பாக மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரிந்து நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். எனினும் பால்நிலை சமத்துவம் சார்ந்து அவர்கள் பல்வேறு சவால்களை சந்தித்து வருகின்றார்கள்.

பால்நிலை சமத்துவம் என்பது அனைத்து பாலினத்திற்கும் சமமான உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் சமூக அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்ற கருத்தை குறிக்கின்றது. ஒருவரின் பாலினத்தை அடிப்படையாக வைத்து எந்தவித பாகுபாடும் காட்டக்கூடாது. இது கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கை உட்பட அனைத்து துறைகளிலும் சமத்துவத்தை உள்ளடக்கியது. இது ஒரு அடிப்படை மனித உரிமை, நீடித்த நிலையான சமூகத்திற்கு அவசியமானது. சமமான உரிமைகள், சமமான வாய்ப்புக்கள், சமூக நீதி, பொருளாதார மேம்பாடு, அரசியல் பங்கேற்பு அனைத்து பாலினத்திற்கும் கிடைக்க வேண்டும் .

சுத்தமான இலங்கை என்ற எண்ணக்கருவானது சுத்தம், அழகு, சுகாதாரம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புடையதாக அமைகின்றது. தூய்மையான இலங்கையின் நிலையான எதிர்காலத்திற்காக நாம் ஒன்றுபடும் இத்தருணத்தில் பாலின சமத்துவம் என்பதனைக் கருத்தில் கொள்வது ஒரு சமூக கட்டாயம் மட்டுமல்ல சுற்றுச்சூழல் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகவும் ஒழுக்கநெறி மேம்பாடாகவும் அமைகின்றது. இவற்றில் பங்கேற்க பெண்களுக்கு அதிகாரமளிப்பது நிலையான தீர்வுகளுக்கு வழிவகுக்கும்.

சுத்தமான சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பெண்கள் பாரம்பரிய பாலின பாத்திரங்களிலிருந்து அவர்கள் வெளிவந்து கல்வி, பொருளாதாரம், அரசியல் வாய்ப்புகளைப் பெற்று முடிவெடுக்கும் சக்தியுடையவர்களாக அவர்களுக்கு சமவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் சுற்றுச்சூழல் பொறுப்பாளர்களாக அவர்களின் திறன்களை வெளிப்படுத்த முடியும். பெண்கள் இயற்கையைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். பூஞ்செடிகளை நாட்டி வீட்டை அலங்கரிக்கும் பெண்கள் பயன்தரு மரங்களை நாட்டி சுற்றுச்சூழலுக்கு பசுமையான காற்றுச் சூழலை அதிகரிக்கலாம். தமது உற்பத்திப் பொருள்கள், தொழிற்சாலைக் கழிவுகளை சரியான முறையில் முகாமை செய்ய பழக வேண்டும். பொது இடங்களில் குப்பைகளை வீசி எறிவதைத் தடுத்து குப்பைகளை முறையாக நிருவகிக்க குடும்ப உறுப்பினர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். குடிக்கும் நீர் மற்றும் ஏனைய நீர்நிலைகளைப் பாதுகாக்க சந்ததியினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். எம் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து உலகிற்கு வெளிப்படுத்துவதில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும். பால்நிலை சமத்துவம் மேம்படும்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுச்சூழலை பாதுகாத்து நோயற்ற சமூகமாக எம்மக்களை ஆரோக்கியமாக வாழவைக்க ஒவ்வொரு பெண்களும் சிந்திக்க வேண்டும்.

சமூக விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பில் பெண்கள் கல்வி அனைத்து குழந்தைகளுக்கும், குறிப்பாக பெண்குழந்தைகளுக்கு தரமான கல்வி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். பெண்களுக்கான திறன் அபிவிருத்தி விடயங்கள் மேம்பாடடைய வேண்டும். பெண்கள் உரிய வயதில் தங்களின் திறன்களை வளர்த்துக்கொள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்த விருப்பத்துடன் முன்வர வேண்டும்.

## சுகாதாரம்

பெண்கள் மற்றும் சிறுமிகளின் உடல் மற்றும் மனநலத்திற்கான சேவைகள் கிடைக்க வேண்டும். இனவிருத்திச் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்பட்டு வேண்டாத கர்ப்பங்களை தவிர்க்க வேண்டும். சுத்தமான பொதுக்கழிப்பிடங்கள் அணுகக்கூடியதாக அமைய வேண்டும். நோயற்ற சமூகமாக உருவாக வேண்டும். அவர்களின் உள ஆரோக்கியம் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## பொருளாதாரம்

பெண்கள் சமமான வாய்ப்புகளைப் பெறும்போது நாட்டின் பொருளாதார உற்பத்தித்திறன் அதிகரிக்கும். அவர்களின் அனைத்து திறமைகளும் பயன்படுத்தப்படும்போது நாடு முன்னேறும்.

## வேலைவாய்ப்பு

பாலின பாகுபாடுகள் இல்லாமல் அனைவருக்கும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும். அவர்களின் சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்பட வேண்டும். கொள்கை வகுப்பிலும் முடிவெடுக்கும் நிலையிலும் அவர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும். வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகள் பாதுகாப்பான சூழலில் தங்களின் சிறுவர் உரிமைகளை அனுபவிக்கும் சூழல்கள் உருவாக வேண்டும். இன்னும் சில இடங்களில் பெண்கள் வேலைக்குச் செல்வது, விரும்பிய தொழிலை தொடங்குவது என்பதற்கு பல்வேறு சமூக தடைகள் உள்ளன.

## சட்டம்

பால்நிலைப் பாகுபாட்டை எதிர்க்கும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். இருக்கும் சட்டங்கள் பெண்கள் சிறுமிகளைப் பாதுகாக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் அனுபவிக்கும் வகையில் அவர்களுக்கான உரிமைகள் சலுகைகள் கிடைக்கப்பெற வேண்டும்.

## நெறிமுறைப் பார்வையில் அவள்

நெறிமுறை என்பது ஒழுக்கம் குறித்த கண்ணோட்டத்தைக் குறிக்கின்றது. ஒரு நல்லொழுக்கமுள்ள நபர் சரியான செயலை முன்னெடுப்பார். சரியான செயல் என்பது அதிக எண்ணிக்கையில் மக்களுக்கு மிகவும் நன்மையை விளைவிக்கும். ஒழுக்க நெறியின் தூண்கள் என்பது ஒன்றுபட்டிருத்தல், சுயமரியாதை, பொறுப்புக்கூறல், நம்பிக்கை, உண்மைத்தன்மை, வெளிப்படைத்தன்மை, சமத்துவம், இணக்கத்தன்மை, விசுவாசம் எனும் பண்புகளைக் கொண்டிருக்கும். மற்றோரை மரியாதை செய்து கழிவிரக்கத்தோடு அவர்களை நேசிப்பவர்களாக மக்கள் மாற வேண்டும். மனித நடத்தை மாற்றம் என்பது தனிநபரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பழக்க வழக்கங்களில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். சாதி, மத, இன பால்நிலை பாரபட்சமின்றி அனைவரையும் நேசிக்க பழக வேண்டும். இந்த மாற்றம் ஒருவருக்கொருவர் நண்பர்களாகி குடும்பம் சமூக வலையமைப்பை ஆரோக்கியமாகக் கட்டியமைக்கும். இது சமூக நிறுவனங்கள் பாடசாலைகள், பணியிடங்களில் நல்ல புரிதல்களை உருவாக்கும். இதனால் வளமான சமூகங்கள், நகரங்கள், உருவாகும். இங்கு சட்டங்கள், கொள்கைகள் மக்களைப் பாதுகாக்கும். பெண்கள் தேசம் புன்னகைப்பூக்களால் நிறைந்திருக்கும். அனைத்து மனிதர்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பது அடிப்படை மனித உரிமை. பால்நிலை சமத்துவம் நிலைநாட்டப்படும் போது சமூகத்தில் நீதியும் நியாயமும் அதிகரிக்கும். வன்முறையற்ற சமூக நல்லிணக்கம் வலுப்பெறும். ஊழலற்ற சமூக நோக்கில் மக்கள் நடத்தை மாற்றங்களில் விழிப்புணர்வடைவார்கள். சுத்தமான இலங்கை என்பது சமூகத்தில் நீதியும் சமத்துவமும் நிலவும் ஒரு நிலையைக் குறிக்கின்றது.

பாரதியார் கூறியது போல் "பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீராது" இவ்வரிகள் பெண்களின் விடுதலை நாட்டின் விடுதலைக்கு எவ்வளவு முக்கியம் என்பதனை உணர்த்துகின்றது.

"ஆணும் பெண்ணும் சமம்"- என அன்றே பாரதி பால்நிலை சமத்துவத்தை ஆதரித்திருந்தார்.

"சாதி இரண்டொழிய வேறில்லை" என சாதி வேறுபாடுகளை ஒழித்து சுத்தமான சமூகத்தை உருவாக்க அன்றே குரலெழுப்பப்பட்டு விட்டது. எனவே அன்று பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பால்நிலை சமத்துவத்தை உறுதி செய்வதன் மூலம் சுத்தமான மற்றும் வளமான இலங்கையை கட்டியெழுப்ப முடியும்.

சுபாசினி சிவதர்சன்,
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், வவுனியா தெற்கு.



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

என் அன்புமிக்க வாசகர் உறவுகளே வணங்குகிறேன் சிரம் தாழ்த்தி. இம்மாத இதழில் அடியேன் மற்றுமொரு ஆயுர்வேத வைத்தியர் தொடர்பான தகவல்களோடு சந்திப்பதில் மகிழ்வு கொள்கின்றேன். அவர்தான் ஜனாப் ஆதம்பாவா அப்துல் றசூல் அவர்கள். (இவர் ஓர் இஸ்லாமியர்) இவர் தனது தந்தையாரான ஆதம்பாவா பொதுமக்களுக்காகச் செய்யப்பட்டுவந்த ஆயுர்வேத வைத்திய சேவையையே இவர் பரம்பரைத் தொழிலாக செய்துவந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. அப்போது இவரது தந்தையாரான ஜனாப். ஆதம்பாவா அவர்களை மக்கள் குதிரைப் பரிசாரியார் என்றே அழைப்பார்கள்.

அப்பெயர் எப்படி வந்ததென்றால், ஆதம்பாவா அவர்கள் சாய்ந்தமருது ஊரைச் சேர்ந்தவர். இவர் பிரித்தானிய ஆட்சியாளர்கள் இருந்த காலத்தில் தனது ஆயுர்வேத நாட்டு வைத்தியம் செய்திருந்தமையை அவதானித்த அவர்கள் அதனைப் பாராட்டி கௌரவித்து அவர்களுக்கு பயணம் செய்வதற்காக ஒரு குதிரையை பரிசளித்ததாக கூறப்படுகிறது. ஆதம்பாவா அவர்கள் தனது சேவையின் நிமித்தம் அந்தக் குதிரையிலேயே சென்று வருவது வழக்கமாக இருந்தது.

சாய்ந்தமருது ஊரைச் சேர்ந்த ஜனாப் ஆதம்பாவா அவர்கள் கல்லோயா அபிவிருத்திச்சபை குடியேற்றத்தின் கீழ் நாவிதன்வெளி 13ஆம் கிராமத்தில் 1953ஆம் ஆண்டளவில் குடியேறி இருந்து தனது வைத்திய சேவையைச் செய்துகொண்டிருந்தார். அப்போது 13ஆம் கிராமத்தில் முழுமையாக முஸ்லிம் மக்களே வாழ்ந்தார்கள். ஆனால் 1980ஆம் ஆண்டளவில் அவர்கள் தமது சுயவிருப்பின் கீழ் வீடு வளவுகளை விற்றுவிட்டு சிலர் 12ஆம் கிராமம், 5ஆம் கிராமம், மத்தியமுகாம் நகரம் போன்ற இடங்களில் குடியமர்ந்தனர். அவ்வாறு சென்றவர்களோடு ஜனாப் ஆதம்பாவா அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் மத்தியமுகாம் நகரில் குடியமர்ந்து இருந்து தமது வைத்திய சேவைகளைச் செய்து வந்தார்.

அவரது இறப்பின் பின்னர் பிள்ளைகளான தௌபிக், யௌபர், அப்துல் றசூல் ஆகியோர்களில் ஜனாப் ஆதம்பாவா அப்துல் றசூல் அவர்கள் தமது தந்தையார் மூலம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஆயுர்வேத வைத்திய முறையை முறையாகப் பயின்று மத்தியமுகாமில் இருந்து மூவின மக்களுக்கும் சிறந்த சேவையை தமது இறுதிக்காலம்வரை செய்திருந்தார். இவரது ஆயுர்வேத முறையானது சிறுவர், பெரியவர்கள், பெண்கள் என பலதரப்பினருக்குமான ஆஸ்துமா, சளி, கபம், வாதம், பெண்களுக்கான நோய்களுக்கும் இவர்களே மருந்துகள் தயாரித்து வழங்குவார்கள். அரசினரால் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களில் ஒருவராகக் காணப்பட்ட இவர்களுக்கு சிலபொருட்கள் தடைசெய்யப்பட்டவையும் இந்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கான அமைச்சிலிருந்து வழங்கப்படுவதுண்டு. இது ஆயுர்வேத வைத்திய முறையில் உள்ள நம்பிக்கையும் நேர்மையுமே ஆகும்.

சரி இந்த வைத்தியர் அவர்கள் வைத்திய சேவைமட்டும் செய்தவரா? இல்லை இவர் பல்துறை சேவையைச் செய்தவர். மத்தியமுகாமில் பள்ளிவாசல் ஒன்றை நிறுவுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர். நாவிதன்வெளி பள்ளிவாசல்கள் ஒன்றிய தலைவராகவும் இவர் இருந்துள்ளார். தமிழ்மொழியுடன், சிங்கள மொழியையும் கற்றவர் என்பதால் இன ஐக்கிய முன்னணித் தலைவராக இருந்தவர். 1983ஆம் ஆண்டு முதல் 2020வரை முஸ்லிம் விவாகப் பதிவாளராக, சமாதான நீதவானாக, சிவில் பாதுகாப்பு குழுத்தலைவராக, முதியோர் சங்கத்தலைவராக என தமது வைத்திய சேவையோடு பல்வேறு பரிமாணங்களில் இம்மண்ணுக்காக, மானுட வாழ்வுக்காக மக்கள் சேவையே மேலான சேவை என வாழ்ந்து இறையடி சேர்ந்த அந்த வைத்தியர் ஜனாப் ஆதம்பாவா அப்துல் றசூல் அவர்களின் சேவையைத் தங்களுடன் பகிர்ந்துகொள்ளக் கிடைத்தது சிறியேனின் பாக்கியமே.

ஆமரர் அப்துல் றசூல் தொடர்பான தகவல்களை வழங்கிய அவரது மருமகன் MM. தௌபிக் (Islah, BA J.P .DO) அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.


சா.செல்வசிகாமணி
ஓய்வுநிலை அதிபர்
மத்தியமுகாம்.




# Veo3: சினிமாவின் எதிர்காலம் இதுதானா? Tech உலகை அதிரவைத்த கூகுளின் புதிய AI!

ICT UNIT , DIVISIONAL SECRETARIAT, - NAVITHANVELI.

இந்த வாரத் தொடக்கத்தில் கூகுள் நிறுவனத்தின் வருடாந்திர **Developer Conference** (மாநாடு) **I/O 2025** நடைபெற்றது. இதில் பல **AI** புதுப்பிப்புக்களுடன் கூகுள், அதன் **AI** வீடியோ உருவாக்கும் **Modal Veo 3** -ஐ வெளியிட்டது. இது கூகுள் ஃப்ளோ **(Flow)** தளத்தின் செயல்பாட்டை வியக்கத்தக்கதாக மாற்றியிருக்கிறது.



**Veo 3** -ல் உரையாகவும் படங்களாகவும் கொடுக்கப்படும் உள்ளீடுகளுக்கு, நிஜ உலகில் உள்ள இயற்பியலுடனும், சரியான உதட்டசைவுடனும் சத்தத்துடன் கூடிய வீடியோவை உருவாக்கிக்கொடுக்கும் திறன் வாய்ந்ததாக இந்த **AI Model** காணப்படுவது இதன் சிறப்பம்சமாகும். இந்த **AI Model**லில் வீடியோக்களை உருவாக்க முயற்சி செய்துள்ள காணொலிகள் நிஜ காணொலிகளைப் போலவே இருப்பதாகவும், வித்தியாசம் கண்டறியவே திணறுவதாகவும் நெட்டிசன்கள் **(Netizens)** கூறிவருகின்றனர்.

இதற்கு உதாரணமாக, **"a man doing stand-up comedy in a small venue tells a joke (include the joke in the dialogue)"** என்ற எளிமையான உள்ளீட்டுக்கு **Veo 3** உருவாக்கியுள்ள வீடியோ வைரலாக பரவிவருகிறது (அருகிலுள்ள **QR** குறியீட்டை **Scan** செய்வதன் மூலம் நீங்களும் அக் காணொலியை காணலாம்).



இந்த **AI** உண்மை போலவே தோன்றும் வீடியோக்கள் மட்டுமல்லாமல், ஒலி அமைப்புக்கள், பின்னணி இரைச்சல்கள், வசனங்கள் என எல்லாவற்றிலும் கலக்குவதாக நெட்டிசன்கள் புகழ்ந்துள்ளனர். **Veo 3** உதவியுடன் உருவாக்கப்பட்ட இன்னும் சில காணொலிகளை கீழே காணலாம்.


**Veo 3** ஒரே உள்ளீட்டில் பாடல் வீடியோக்களை உருவாக்கும்,




பைதகரஸ் தேற்றம் சொல்லித்தரவும் பயன்படும்.



ஒரு Action படத்தின் காட்சி



## உங்கள் கைத்தொலைபேசியில் இந்த செயலிகள் உள்ளதா...? கவனமாக இருங்கள்...!




கூகிள் நிறுவனம் மேற்கொண்ட சோதனையில் தீங்கு விளைவிக்கக்கூடிய உள்ளடக்கங்களைக் கொண்ட 20க்கும் மேற்பட்ட செயலிகள் Google Play Store இல் அடையாளங் காணப்பட்டுள்ளது. மேலும், பயனர்கள் இந்த செயலிகளை தரவிறக்கம் செய்யக்கூடாது என்ற எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி, இந்த செயலிகளை ஏற்கனவே தரவிறக்கி நிறுவியவர்கள் அதனை அழித்துவிட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

கடந்த சில வருடங்களாகவே Crypto currency செயலிகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளன. மற்றும் இந்த செயலி மூலமாக எடுக்கப்படும் Quick Money Policyகள் மக்களை அவர்களுடைய வலைக்குள் விழ வைக்கிறது. டிஜிட்டல் பணத்திற்கான Wallet Applications போல தோற்றமளிக்கும் இந்த தீங்கு விளைவிக்கும் செயலிகள் குறித்து மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இது சம்பந்தமான விவரங்களை சைபர் ரிசர்ச் அண்ட் இன்டெலிஜென்ஸ் லேப்ஸ் (Cyber Research and Intelligence Labs - CIRL) வெளியிட்டுள்ளது.

### தீங்கு விளைவிக்கும் அப்ளிகேஷன்கள்: இதனால் ஏற்படும் ரிஸ்க் என்ன?

தீங்கு விளைவிக்கும் செயலிகளை நிறுவினால், உடனடியாக Wallet இற்க்கான 12 இலக்க Recovery PIN நம்பரை உள்ளிட வேண்டும் என்று பயனர்களுக்கு முதலில் அறிவுறுத்தப்படுகிறது. இதன் மூலமாக துருவிகள் (Hackers) டிஜிட்டல் Walletகளின் முழு கட்டுப்பாட்டையும் பெறுகின்றார்கள். மற்றும் எந்த ஒரு சத்தமும் இல்லாமல் அமைதியாக அவர்களுடைய கணக்குகளுக்கு பணத்தை மாற்றி கொள்கிறார்கள் என்று பாதுகாப்பு நிறுவனம் கூறுகிறது. அப்படி துருவிகள் உங்களுடைய தகவல்களை திருடுவதற்கு பயன்படுத்தும் சில செயலிகளான Suit Wallet, SushiSwap, Raydium, Pancake Swap,Open-Ocean Exchange, Hyperliquid, BullX Crypto, Harvest Finance blog இந்த செயலிகள் பிளே ஸ்டோரில் பட்டியலிடப்பட்டுள்ளன. மற்றும் இவற்றை நீங்கள் ஏற்கனவே நிறுவியிருந்தால் அவற்றை உடனடியாக நீக்கி விடுங்கள். அதுமட்டுமின்றி, இவற்றில் உள்நுழைந்து முக்கியமான கடவுச்சொற்களையும், Passkeyகளையும் இந்த கணக்குகளுக்கு வழங்காதீர்கள். மேலும், கூடுதல் பாதுகாப்பாக Two factor securityயை செயற்படுத்தி கொள்ளுங்கள்.

கூகுள் எப்போதுமே அதன் பயனர்களை Play Store போன்ற நம்பகமான மூலங்களில் இருந்து மட்டுமே செயலிகளை தரவிறக்க அறிவுறுத்துகிறது. தெரியாத நபர்களிடமிருந்து வரும் செயலிகளுக்கான இணைப்புகளை கிளிக் செய்யாதீர்கள். Crypto Wallet மூலமாக செய்யப்படும் தரவு திருட்டு என்பது தற்போது அதிகரித்து வருகிறது.

மேலும், துருவிகள் தற்போது செயற்கை நுண்ணறிவை ஒரு பெரிய கருவியாக பயன்படுத்தி வருகின்றனர். எனவே, நாம் மிகவும் புத்திசாலித்தனமாகவும், எச்சரிக்கையாகவும் செயல்பட்டால் மட்டுமே இந்த மாதிரியான மோசடிகளில் மாட்டிக் கொள்ளாமல் தப்பிக்கலாம்.




ஆக்கம்:
சீதா வாசன்

# குறுக்கெழுத்துப் போட்டி இல.17 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 த | லை | 2 வி | 3 தி | ■ | 4 தே | 5 ர் | வு |
| ட | ■ | 6 ஞ் | ப | 7 சு | ■ | நீ | ■ |
| ய | ■ | 8 ஞா | க | ப | 9 ம் | ■ | 10 நா |
| 11 வி | 12 ச | ன | ம் | ■ | 13 க | 14 ய | ல் |
| 15 ய | தா | ம் | ■ | 16 ப | து | மை | ■ |
| 17 ல் | வ | ■ | 18 த | ய | க் | க | 19 ம் |
| ■ | 20 தா | 21 று | மா | று | ■ | ■ | ன |
| 22 க | னி | ம | ம் | ■ | 23 ம் | க | கா |

## பாராட்டு பெறுவோர்

திருமதி. R. பிரியதர்ஷன்
பாண்டிருப்பு-01




# குறுக்கெழுத்துப் போட்டி இல – 18

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | 4 | 5 |
| | ■ | ■ | | ■ | 6 | | |
| 7 | | 8 | | 9 | | | ■ |
| | ■ | | ■ | | ■ | 10 | 11 |
| ■ | 12 | | 13 | | 14 | ■ | |
| ■ | 15 | | | ■ | 16 | 17 | |
| 18 | | ■ | 19 | | | | |
| 20 | | ■ | | ■ | 21 | | ■ |

## இடமிருந்து வலம்

01. எழுத்து வடிவமற்ற ஒரு தொடர்பாடல் முறை.
03. இது ஒரு நீர்ப்பறவை.
06. தகைமை என்றும் சொல்லலாம் (குழம்பி).
07. வானில் மாற்றம் என்றால் இது அடிக்கடி வரும்.
10. பிரித்தல் என்றும் பொருள்படும் (திரும்பி).
12. பலதரப்பட்ட செயற்பாடுகளை இப்படிக் கூறுவர் (குழம்பி).
15. நீண்ட, குறுகலான, மேடாக உள்ள வடிவம். தரையிலிருந்து உயரத்தில் செஞ்சரிவாக இருக்கும் (குழம்பி).
16. யானைக்குத்தான் இது பிடிக்கும் என்பார்கள்.
18. சில நாடுகளில் இதனாலும் தண்டனை வழங்குவர் (திரும்பி).
19. இஷ்டம் என்றும் சொல்லலாம் (குழம்பி).
20. கணவனை இவ்வாறும் அழைப்பர்.
21. இது புனையப்படும் ஒன்று.

## மேலிருந்து கீழ்

01. வாரத்தில் ஒரு நாள்.
02. கோட்டைக்கு முக்கியமானது (தலைகீழ்).
03. இதைக் கொடுத்தால் சிலர் தவற மாட்டார்கள் (குழம்பி).
04. வாடகைக்கு விடுதல் என்றும் பொருள்படும் (குழம்பி).
05. புகழ் பாடுவதையும் இப்படிக் கூறுவர்.
08. தமிழ் இலக்கணத்திலுள்ள இடம் ஒன்று (தலைகீழ்).
09. கூட்டமாக வாழும் ஒரு உயிரினம் (தலைகீழ்).
11. இதைக் கண்ணாடி காட்டுமாம் (குழம்பி).
12. விரைவு சேவை.
13. சேலையின் முந்தானையை இப்படியும் சொல்வார்கள்.
14. செயல் (தலைகீழ்).
17. இது வந்தால் பணிவு வேண்டும் (குழம்பி).
18. இது ஒட்டிக்கொள்ள உதவும் (தலைகீழ்).

**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2025.07.15ஆம் திகதி பி.ப. 04.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# அரச காணி ஆவணங்களும் அடுத்துரிமை நியமனமும்

NMM A.Sujan, Colonization Officer

அனுமதிப்பத்திரர் மூலம் பாராதீனப்படுத்தப்பட்ட காணி அல்லது காணித்துண்டு தொடர்பாக, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 7ஆம் அத்தியாயத்தில் காட்டப்படும் அடுத்துறுபவர் எனக் கருதப்படுவது, அனுமதிப்பத்திரக்காரர் அல்லது உரிமையாளரின் வாழ்க்கைத்துணை உயிருடன் இருக்கும் சந்தர்ப்பத்தில், அவ் வாழ்க்கைத்துணை காணியில் அல்லது உரிமையாளரின் மரணத்தின் பின்பு பெற்றுக் கொள்வதற்கு முடியாதபோது, அவ்வாறு இல்லையாயின் வாழ்க்கைத்துணை உயிருடன் இல்லாத வேளையில் அனுமதிப்பத்திரக்காரர் அல்லது உரிமையாளர் இறக்கும்போது காணிக்கு அடுத்துரிமை உருத்துள்ள நபராகும்.

## இறந்த அனுமதிப் பத்திரக்காரரின் வாழ்க்கைத் துணைக்கு அந்த அனுமதிப் பத்திரக்காரருக்கு அனுமதிப்பத்திரம் மூலம் வழங்கப்பட்ட காணிக்கு அடுத்துறுபவராவதற்கு உள்ள உரிமை

1. 19ஆவது பிரிவின் (2)ஆவது உபபிரிவின் நடைமுறைகளின்படி வருடாந்த தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு நியமிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக்காரர் இறக்கும் போது அத் தவணைக் கட்டணத்தைச் செலுத்தாது இருந்தாலும், அந்த அனுமதிப்பத்திரகாரர் மூலம் தமது அடுத்துறுபவராக பெயரிடப்பட்டிருந்தாலும், இல்லா திருந்திருந்தாலும் அனுமதிப்பத்திரம் மூலம் அந்த அனுமதிப்பத்திரக்காரருக்கு பாராதீனப்படுத்தப்பட்ட காணிக்கு அடுத்துறுபவராக அவரின் அல்லது அவளின் வாழ்க்கைத்துணைக்கு உரிமை உள்ளதோடு அந்த அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் அந்த வாழ்க்கைத் துணைக்கும் உரியதாக வேண்டும்.

எவ்வாறாயினும் வாழ்ககைத்துணை அடுத்துறுபவராக நியமிக்கப்படாதபோது அனுமதிப் பத்திரக்காரரின் மரணத்தின் பின்பு வாழ்க்கைத் துணை மேலுள்ள உப பிரிவின்படி அடுத்துரிமை பெற்றுள்ள வேளையில் வாழ்க்கைத்துணை திருமணம் செய்தால் அத் திருமணத்துடன்,

(அ) இறந்த அனுமதிப்பத்திரக்காரர் மூலம் நியமிக்கப் பட்டு பின்பு உரிமையாளராக இருந்தால் அவருக்கு அடுத்துரிமை உருத்து கிடைக்க வேண்டும்.

(ஆ) அவ்வாறு பின் உரிமையாளராக நியமிக்கப்படாதிருப்பின், மூன்றாவது அட்டவணையில் முதலாவது நடைமுறையின்படி காணியின் உரிமை குறித்த நபருக்கு மாற்றப்படல் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரத்தின் மூலம் பாராதீனப்படுத்தப்பட்ட காணிக்கு முதலாவது உப பிரிவின் கீழ் அடுத்துரிமை நியமித்து இறந்த அனுமதிப் பத்திரக்காரரின் வாழ்க்கைத்துணை சீவிய காலத்தினுள் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை முறையாகக் கடைப்பிடித்தால் அவருக்கு அல்லது அவளுக்கு கீழ்க்காட்டப்படும் நிபந்தனையின் கீழ் அளிப்புப்பத்திரம் பெற்றுக் கொள்ள உரிமை உள்ளது.

(அ) அளிப்பின் மூலம் வழங்கப்படும் காணியை கையுதிர்க்கும் அதிகாரம் அவ் வாழ்க்கைத் துணையிடம் இல்லை.

(ஆ) அக்காணிக்கு அடுத்துறுபவரை பெயரிடும் அதிகாரம் அவ் வாழ்க்கைத்துணையிடம் இல்லை.

(இ) அவ் வாழ்க்கைத்துணையின் மரணத்துடன் அவன் அல்லது அவள் வேறு திருமணம் செய்தால் அத்துடன் இறந்த அனுமதிப்பத்திரக்காரர மூலம் பெயரிடப்பட்ட பின் உரிமையாளருக்கு அல்லது அவ்வாறு நியமிக்கப்படவில்லையாயின் சட்டத்தின்படி அடுத்துறுபவராக உரிமையுள்ள நபருக்கு காணி உரிமையுள்ளதாகும்.

எவ்வாறெனினும், அனுமதிப்பத்திரம் மூலம் பாராதீனப்படுத்தப்பட்ட காணிக்கு அடுத்துரிமை பெறுவதற்கு இறந்த அனுமதிப்பத்திரக்காரர் மூலம் வாழ்க்கைத்துணை பெயரிடப்பட்டுள்ளபோது அவ் வாழ்க்கைத்துணைக்கு வழங்கப்படும் எந்தக் காணி தொடர்பாகவும் மேற்படி நடைமுறை பொருத்தமானதன்று.

(3) இரண்டாவது உப பரிவின் நடைமுறைகளை மீறும்படி வாழ்க்கைத்தணை மூலம் செய்யப்படும் எந்தவொரு கையுதிர்ப்பும் அல்லது பெயரிடப்படுதலும் செல்லுபடியற்றதாகும்.

### காணித்துண்டின் உரிமையாளர் இறக்கும்போது வாழ்க்கைத்துணை அக் காணித்துண்டுக்கு அடுத்துறுபவராக உரிமையுள்ளதென...

**1.** காணித்துண்டின் உரிமையாளரின் மரணத்தின் பின்பு அவ்வுரிமையாளரின் வாழ்க்கைத்துணை கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் அக் காணித்துண்டிற்கு அடுத்துறுபவராக உரிமையுள்ளது.

**(அ)** காணித்துண்டின் பின் உரிமையாளர் பெயரிடப்பட்டிருப்பின் அந்த வாழ்க்கைத்துணையின் திருமணத்துடன் அக் காணித்துண்டின் உரிமை அந்தப் பின் உரிமையாளருக்கும், அவ்வாறு பின் உரிமையாளர் பெயரிடப்படவில்லையாயின் 3ஆவது அட்டவணையின் 1ஆவது நடைமுறையின்படி அடுத்துரிமை கிடைக்கும் நபருக்கு மாற்றம் செய்யப்படும்.

**(ஆ)** அக் காணித்துண்டினை வேறு நபருக்கு கையுதிர்க்கும் அதிகாரம் வாழ்க்கைத்துணையிடம் இல்லை.

**(இ)** அக் காணித்துண்டிற்காக அடுத்துறுபவரை பெயரிடும் அதிகாரம் வாழ்க்கைத்துணையிடம் இல்லை. எவ்வாறெனினும் காணித்துண்டின் உரிமையாளராக இருந்து இறந்த உரிமையாளர் மூலம் காணித்துண்டிற்கு அடுத்துறுபவராக வாழ்க்கைத்துணை பெயரிடப்பட்டுள்ளபோது மேலே காட்டப்பட்டுள்ள நடைமுறை அவ் வாழ்க்கைத்துணைக்கு பொருத்தமுடையதன்று.

**(2)** மேலே (1)ஆவது உப பிரிவின் நடைமுறைகளை மீறும்படி எந்தவொரு வாழ்க்கைத்துணையின் மூலம் செய்யப்படும் கையுதிர்த்தல் அல்லது பெயரிடுதல் செல்லுபடியற்றதாகும்.

### அனுமதிப்பத்திரத்தின் மூலம் பாராதீனப் படுத்தப்பட்ட காணி அல்லது காணித்துண்டுக்கு அடுத்துறுதல்

அனுமதிப்பத்திரக்காரர் காலமான வேளையில், சட்டத்தின் 19ஆவது பிரிவின் நடைமுறைகளின்படி வருடாந்த தவணைக் கட்டணம் செலுத்திக் கொண்டிருந்த யாராவது அனுமதிப்பத்திரக்காரர் இறக்கும்போது, அவ்வாறு இல்லையாயின் வாழ்க்கைத்துணை இல்லாது ஏதாவது காணித்துண்டின் உரிமையாளர் இறக்கும்போது அவ்வாறில்லாமல் அவ் அனுமதிப்பத்திரக்காரர் அல்லது உரிமையாளர் வாழ்க்கைத்துணைக்கு முன்னர் இறக்கும்போது அவ் அனுமதிப்பத்திரம் மூலம் அனுமதிப்பத்திரக்காரருக்கு பாராதீனப்படுத்தப்பட்ட காணி அல்லது காணித்துண்டின் உரிமையை வாழ்க்கைத்துணை பெற்றுக் கொள்ள முடியாது போனால், அல்லது வாழ்க்கைத்துணை இறக்கும்போது அனுமதிப்பத்திரக்காரர் அல்லது உரிமையாளர மூலம் பெயரிடப்பட்ட அடுத்துறுபவர் அக் காணி அல்லது அக் காணித்துண்டின் அடுத்துறுபவராக உரிமை பெறுவார்.

### காணித்துண்டுக்கு அடுத்துறுபவராக பெயரிடுவது தொடர்பான எல்லை

வாழ்க்கைத்துணை அல்லது 3ஆவது உப அட்டவணையில் 1ஆவது வரியின் கீழ் வரும் உறவினரானவர் தவிர வேறெவரும் அடுத்துறுபவராக அனுமதிப்பத்திரக்காரர் மூலம் அல்லது காணித்துண்டில் உரிமையாளர் மூலம் நியமிக்கப்பட முடியாது.

### பெயரிடுவது தொடர்பான பொதுவான கொள்கை

**(1)** ஏதாவது காணித்துண்டின் உரிமையாளர் அல்லது அனுமதிப்பத்திரக்காரர் மூலம் திருமணமாகாதிருக்கும் போது செய்யப்படும் பெயரிடல் அவ் உரிமையாளர் அல்லது அனுமதிப்பத்திரக்காரர் திருமணமாவதுடன் இரத்தாகும்.

**(2)** காணித்துண்டிற்கு அல்லது அனுமதிப்பத்திரம் மூலம் வழங்கப்பட்ட காணிக்காக உரிமையாளர் அல்லது அனுமதிப்பத்திரக்காரர் மூலம் ஒருவருக்கு அதிகமான நபர்களை அடுத்துறுபவர்களாக பெயரிடல் முடியும். எனினும் அவ்வாறு பெயரிடல் அளிப்புப்பத்திரத்தில் அல்லது அனுமதிப்பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளை மீறக்கூடாது.

**(3)** காணித்துண்டு அல்லது அனுமதிப்பத்திரம் மூலம் வழங்கப்பட்ட காணியின் பிரித்த அல்லது பிரிக்கப்படாத துண்டுக்கு அல்லது பங்கிற்கு யாராவது நபர் அடுத்துறுபவராக பெயரிடல், அவ்வாறு பெயரிடப்படும் ஆவணத்தில் அந்த காணித்துண்டின் அல்லது அனுமதிப்பத்திரம் மூலம் வழங்கப்பட்ட காணியின் மிகுதித்துண்டு அல்லது பங்கிற்காக அடுத்துறுபவராக குறித்தபடி பெயரிடப்படுதலைச் செய்ய முடியாது.

**(4)**அடுத்துறுபவராக நியமித்தல் அல்லது அந்த நியமித்தலை இரத்துச் செய்தல். ஏதாவது நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாக இருக்கக் கூடாது.

தொடரும்...

නාවෙලි NAAVELI
நாவெளி
பிரதேச செயலகம் – நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
புதன்கிழமை / மலர் - 18 / இதழ் - 49 / 25 ஆனி 2025

# இஸ்ரேல் - ஈரான் மோதலும் கேள்விக்குறியாகும் உலக ஒழுங்கும்



மேற்காசிய நாடுகளான இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கிடையில் கடந்த 45 ஆண்டு காலமாக மோதல் போக்கு நிலவுகின்றது. இஸ்ரேலை தனி நாடாக ஏற்றுக்கொள்ள ஈரான் விரும்பவில்லை. பாலஸ்தீனத்தின் ஆக்கிரமிப்புப் பகுதி என்றே குறிப்பிட்டு வருகின்றது. இந்த இரண்டு நாடுகளுக்கிடையிலான மோதல் கடந்த 2023இல் இருந்தே தீவிரமடைந்து அக்கால கட்டத்தில் பாலஸ்தீனத்தின் காஸா பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் நாட்டுக்குள் புகுந்து 1000 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களைக் கொன்றும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை சிறையும் பிடித்தனர்.

இந்தச் செயலால் ஆத்திரமடைந்த இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு காஸாமீது போர் தொடுத்தார். இந்த நேரத்தில் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக இருந்து ஈரானும், லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளும் இஸ்ரேலைத் தாக்கினர். அந் நிலமையிலிருந்து ஈரானை ஒழித்துக்கட்ட ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாக இஸ்ரேல் கூறிக்கொண்டு வருகின்றது.

யுரேனியத்தை அணு ஆயுதமாக பயன்படுத்த அது 90 சதவீதமாக செறிவூட்டப்படல் வேண்டும். ஈரானிடம் தற்போது 410KG யுரேனியம் உள்ளது என்றும், அவை 60 சதவீதம் செறிவூட்டப்பட்டவையாக காணப்படுகின்றது என்றும், இந்த யுரேனியத்தின் அளவு ஈரானிடம் 134 கிலோவாக இருக்கின்றது என்றும் சர்வதேச அணுசக்தி முகாமை நிறுவனம் கூறியுள்ளது. இதனடிப்படையில் இன்னும் சில மாதங்களில் ஈரான் பல அணுகுண்டுகளைத் தயாரித்து விடலாம், இதனைக்கொண்டு இஸ்ரேலை அழித்துவிடும் என இஸ்ரேலிய அரசு கருதிக்கொண்டது. ஆனால் தன்னிடம் (இஸ்ரேலிடம்) அணுவாயுதங்கள் எதுவும் இல்லை என்றும் மார்தட்டி சொல்லிக்கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக ஈரான் நாட்டின் (அணுகுண்டு) தயாரிப்பு கட்டமைப்புகளைத் தாக்கி அழிப்பதற்கான முஸ்தீபுகளை இஸ்ரேல் வகுத்தது. தனது மொசாட் உளவு அமைப்பின் உதவியுடன் அணுசக்தித் தளங்கள், ஏவுகணை உற்பத்தி மையங்கள், இராணுவத் தளங்கள், இராணுவ தளபதிகளின் நடமாட்டங்கள், அணு விஞ்ஞானிகளின் துல்லிய விபரங்களைக் கண்காணித்து திட்டம் தீட்டியது.

இதற்கமைய மொசாட் உளவாளிகள் ஈரான் நாட்டிற்குள் ஏவுகணைகள் ட்ரோன்களுடன் ஊடுருவி இரகசிய தாக்குதல் தளங்களை அமைத்து கட்டளைக்காக காத்திருந்தனர். இவ்விடயத்தில் எங்களுக்கு நன்றாகப் புலப்படுகின்ற ஒரு விடயம் உள்ளது. அதாவது ஈரான் நாட்டின் பாதுகாப்பு வலையமைப்பில் காணப்படும் ஓட்டைகளை இஸ்ரேல் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளது. மொசாட் உளவுப்பிரிவு என்பது சர்வதேச ரீதியாக நன்கு திறமை வாய்ந்த இஸ்ரேலிய உளவுப் பிரிவாகும். இதன் முக்கியமான செயற்பாடுதான் இஸ்ரேலிய நாட்டிற்கான பல வெற்றி வாய்ப்புகளுக்கும், முன்னேற்ற நடவடிக்கைகளுக்கும் காரணமாக விளங்குகின்றது. இதனால்தான் இஸ்ரேலியர்கள் மூளைசாலிகள் என்று கூறப்படுகின்றது. இந்நிலைமையில்தான் ஓமானில் அணு ஆயுதம் சம்பந்தமான பேச்சுவார்த்தை அமெரிக்காவிற்கும் ஈரானுக்குமிடையில் இரண்டு மூன்று சுற்றுகள் நடைபெற்று முடிந்த நிலையில், அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கான நாள்கள் குறிக்கப்பட்ட நிலையில் கடந்த 2025.06.11ஆந் திகதி இஸ்ரேலினால் “ஆப்பரேசன் ரைசிங் லயன்” என்ற பெயரில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. போர் விமானங்கள், ட்ரோன்கள்

ஈரானுக்குள் பாய்ந்து ஈரானின் அணு ஆயுதத் தளங்கள், இராணுவத் தளங்கள், விஞ்ஞானிகள், முக்கிய இராணுவ 1ஆம் 2ஆம் நிலைத் தளபதிகள் எனக் குறிவைக்கப்பட்டு கொல்லப்பட்டனர். ஏற்கனவே குறிப்பிட்டபடி தயாராக இருந்த மொசாட் உளவாளிகள் ட்ரோன்களை இயக்கி ஈரானின் வான் பாதுகாப்பு கட்டமைப்புகளை ஈரானின் எதிர்ப்பின்றி சீர்குலைத்து தான் நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதற்கு ஏதுவாக அமைத்துக்கொண்டனர்.

எதிர்பாராத இஸ்ரேலின் இந்த தாக்குதலுக்கு நாங்கள் கடும் தண்டனையை வழங்குவோம் என ஈரானின் உயர் தலைவர் அப்துல்லா அலி கொமேய்னி எச்சரிக்கை விடுத்திருந்தார். இதற்கமைவாக இஸ்ரேல் நாட்டின் முக்கிய நகரங்களான ஜெருசலேம், டெல்அலிவ் போன்றவை குறிவைக்கப்பட்டு 100 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள் ஏவப்பட்டன. இவைகள் யாவும் ஈராக் வான்பரப்பு வழியாக இஸ்ரேலை நோக்கிப் பாய்ந்தன.

இவைகள் இஸ்ரேலின் அயர்ன்டோம் எனும் வான் பாதுகாப்புக் கவச அமைப்பு வானிலேயே தாக்கி அழித்தது. அத்தோடு இஸ்ரேலிய இராணுவத்திற்கு உதவியாக அமெரிக்காவின் வான் பாதுகாப்பு கவச அமைப்பும் ஈரானிய ஏவுகனணகளைப் பதம் பார்த்தன.

எவ்வாறு இருந்தாலும், ஒரு சில ஏவுகணைகள் இஸ்ரேலிய நகரங்களில் வீழ்ந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. வான் தாக்குதலுக்கான எச்சரிக்கை சைரன் ஒலித்ததால் பொதுமக்கள் பதுங்கு குழிகளில் பதுங்கி தத்தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொண்டதால் பொதுமக்கள் உயிரிழப்பு மிகக் குறைவாகும். ஆனால் பல குடியிருப்புகள் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்தன. தற்போதைய நிலவரங்களின்படி இந்த பதற்றநிலை தீவிரமடைந்து உச்சத்திற்கு வந்து ஓர் அபாயகரமான கட்டத்தை அடைந்துள்ளது. தொடர் இழப்புகள் இரு பிரிவினருக்கும் ஏற்பட்டுவரும் இந் நிலைமையில் தனிநபர் இலக்குகள் குறிவைக்கப்பட்டு தாக்கப்படுகின்றன. ஈரானில் முக்கிய எரிவாயுக்கிடங்கு, எண்ணெய்ச் சேகரிப்பு நிலையங்கள் என தொடங்கி இராணுவ புலனாய்வு உயர் தலைமையகங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. இஸ்ரேலில் உள்ள அமெரிக்க தூதரகமும் தாக்குதலுக்குள்ளானதாக அறியமுடிகின்றது.

இஸ்ரேலில் வான்வெளி மற்றும் விமான நிலையங்கள் முழுமையாக மூடப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் அறிவித்துள்ளன. இத்தகவல் இஸ்ரேலிய சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக வெகுவிரைவில் இரு நாடுகளிடமிருந்தும் தாக்குதல் தீவிரமடையும். இதன் பின் விளைவுகள் என்னவாக இருக்கலாம் என்பது கூட ஊகிக்க முடியாத விடயமாக உள்ளது. ஹர்மஸ் ஜலசந்தி (Strait of Hormuz) மூலம் நடைபெறும் வணிகப் போக்குவரத்து தடைப்படலாம். பெற்றோலிய கச்சா எண்ணெய் விலை அதிகரிக்கலாம். மேற்காசிய மண்டலத்தின் பதற்றம் பொதுவாக வெளியே அதிகம் பரவுவதும் இல்லை. அதிலும் ஈரான் - இஸ்ரேல் போரில் உலக நாடுகள் அதிக அக்கறை காட்டும் என்று எதிர்பார்ப்பதற்கும் இல்லை. அரபு நாடுகளுக்கு மத்தியில் கூட ஈரானுக்கு பெரிய அளவில் ஆதரவுகள் கிடைக்கவும் வாய்ப்புகள் இல்லை. உலக நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை ஈரான் அரசு புரிந்து இணக்கத்துடன் நடந்து கொள்ளவேண்டும். பொதுவாக வரம்பு மீறிய தாக்குதலுக்கு மற்றைய நாடுகள் கடுமையான கண்டனம் தெரிவிக்கும். சமாதான முயற்சிகளுக்கு முன்னுரிமை வழங்குங்கள் என்று கோசமிட்டு கூறப்படும். முக்கியமாக அணு ஆராய்ச்சியில் ஈடுபட எங்களுக்கு உரிமை இல்லையா? என்ற ஈரானிய அதிபரின் கேள்வி அர்த்தமானது ஆழமானது. நாங்கள் வைத்துக்கொள்வோம். ஆனால் நீங்கள் வைத்துக்கொள்ளக்கூடாது என்பது ஏற்றுக்கொள்ள முடியாததுதானே.

அணு ஆயுதப் பரவல் தடைச்சட்டம் முறையாக உண்மையாக முழுமையாக கடைபிடிக்கப்படுவது, உலக நலனுக்கும், உலக ஒழுங்குக்கும் நல்லது என்பதோடு மனிதனின் நிம்மதியான வாழ்வுக்கும் வழிவகுக்கும் என்பது திண்ணம். நேரடியான, மறைமுகமான ஆயுத வலிமை மென்மேலும் சண்டைகள் சச்சரவுகள் சேதங்கள் உயிரிழப்புகளையே கொண்டு வரும் என்பதை வலிமையுள்ள உலகத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளவும் வேண்டும்.

ஆக்கமும் தேடலும்
கியோ

# Appreciation for Honouring the Legacy of a Visionary Principal

Balasingam Sajindran, Pandiruppu

It is often said that great leaders are defined by the lasting impact they leave on their communities and institutions. Such was the case with Principal Rev Bro S.A.I. Mathew, a man whose leadership and dedication shaped Carmel Fatima College in Kalmunai into one of the most prestigious and influential educational institutions in the country. Over the course of more than two decades, Rev Bro S.A.I. Mathew transformed the school, turning it into a beacon of academic excellence, social responsibility and cultural richness. His contributions to education and society were immeasurable and his legacy continues to resonate through the lives of countless individuals he mentored and nurtured.

Principal Rev Bro S.A.I. Mathew was not just an administrator he was a visionary, a teacher, a psychologist, a social worker and an author. His life was a testament to the power of education to shape individuals and communities. As we remember his extraordinary leadership, it is impossible not to reflect on the profound influence he had on both Carmel Fatima College and the countless students who walked through its doors under his guidance.



## Transforming a School into a National Institution.

When Principal Rev Bro S.A.I. Mathew first assumed the role of the principal, Carmel Fatima College was a modest institution with potential but lacking the prominence it would later achieve. Under his stewardship, the school grew into a respected institution of learning, not just locally but across the nation. His ability to recognize the potential within the school, coupled with his strategic leadership, led to a transformation that elevated Carmel Fatima College into one of the country's leading educational institutions.

Principal Rev Bro S.A.I. Mathew's approach to leadership was grounded in his deep understanding of education and his ability to connect with both students and staff. While he

was known for his authoritarian style, this was not a reflection of rigid control but rather a disciplined commitment to excellence. His clear expectations, combined with a profound sense of duty to his students, created an environment where academic rigor and personal growth were paramount. Under his leadership, Carmel Fatima College became a model of educational excellence, with students consistently excelling in national exams, competitions and co-curricular activities.

One of the defining characteristics of Principal Rev Bro S.A.I. Mathew was his commitment to ensuring that the students were not only academically successful but also well-rounded individuals. He believed that education extended beyond textbooks and exams and that the true value of schooling lay in preparing students to be responsible citizens and professionals in various fields. Whether it was encouraging students to engage in community service, promoting moral values or cultivating leadership skills, Principal Rev Bro S.A.I. Mathew ensured that his students were equipped to contribute meaningfully to society.

## A Visionary Leader and Builder of Relationships

Principal Rev Bro S.A.I. Mathew was a man of vision and his foresight extended beyond the classroom. He understood the importance of maintaining strong relationships with political leaders and decision-makers of his time, and he skilfully cultivated these relationships to benefit Carmel Fatima College. Through his diplomacy and exceptional communication skills, he was able to bring much-needed resources to the school, ranging from funding to infrastructure improvements. His ability to navigate the political landscape, without compromising the school's integrity, ensured that Carmel Fatima received the support it needed to thrive.

While his authoritarian nature was sometimes seen as a reflection of his strong leadership, it was also a manifestation of his dedication to maintaining the highest standards for his students and the institution. Principal Rev Bro S.A.I. Mathew was not one to shy away from difficult decisions and his keen judgment and clear decision-making process allowed him to steer the school through challenges and to new heights of success.

Beyond the pragmatic aspects of leadership, Principal Rev Bro S.A.I. Mathew was a visionary who saw the potential for growth in every aspect of Carmel Fatima College. His ability to forecast the needs of the school and act accordingly helped ensure that Carmel Fatima College was not just reacting to changes but anticipating and shaping the future of education in the region. His efforts to secure resources, whether through political channels or community partnerships, made him a key figure in the educational landscape.

## A Master Educator and Psychologist

Principal Rev Bro S.A.I. Mathew was, at his core, an educator. His passion for teaching and his deep understanding of both the academic and psychological needs of his students made him an exceptional teacher. Fluent in both Tamil and English, he was able to connect with people, officials and politicians from diverse language backgrounds and get resources from them. His linguistic talents not only made him a great communicator but also a lover of literature and he often infused his lessons with references to both Tamil and English literary works, inspiring students to

appreciate the beauty of language and the power of storytelling.

As an educator, Principal Rev Bro S.A.I. Mathew was also a psychologist. He possessed an innate understanding of human behaviour, particularly that of young adults navigating the complexities of adolescence. His insights into the psychological development of his students allowed him to support them in ways that went beyond academics. Whether it was through personal counselling, career guidance or offering a listening ear, Principal Rev Bro S.A.I. Mathew was there for his students, providing them with the tools to succeed both academically and emotionally.

## An Author and Advocate for Catholic Values

In addition to his role as an educator, Principal Rev Bro S.A.I. Mathew was a prolific author and a staunch advocate for Catholic values. His writings, which included both educational texts and books on Catholicism, reflected his commitment to faith, learning and moral development. His books served as both a resource for teachers and students and as a reflection of his personal philosophy on education and spirituality. Through his works, Principal Rev Bro S.A.I. Mathew conveyed his deep belief in the power of education to shape not just minds but hearts and he often used his writings to emphasize the importance of integrity, compassion and service to others.

Principal Rev Bro S.A.I. Mathew's Catholic faith was a guiding force in his life and it informed much of his approach to leadership and education. He saw education as a means to impart not just academic knowledge but also moral and spiritual values. This belief in the transformative power of education was central to his mission as the principal and shaped the culture of Carmel Fatima College during his tenure.

## A Lasting Legacy

Principal Rev Bro S.A.I. Mathew's legacy is one that will endure for generations to come. His contributions to Carmel Fatima College and the countless lives he touched are immeasurable. His leadership style, though at times authoritarian, was always rooted in a deep love for his students and a steadfast commitment to their growth and development. Through his vision, discipline and ability to build relationships, he transformed Carmel Fatima College into a place where academic excellence and moral integrity went hand in hand.

Beyond the walls of the school, Principal Rev Bro S.A.I. Mathew's influence can be seen in the professional achievements of his former students, many of whom have gone on to become successful doctors, engineers, teachers, social workers and leaders in their respective fields. They carry with them the lessons and values instilled by their principal, continuing his legacy of service, excellence and integrity.

While Principal Rev Bro S.A.I. Mathew is no longer with us, his impact remains alive in the very fabric of Carmel Fatima College and in the lives of those who were fortunate enough to have known him. As we reflect on his life and work, we celebrate not just the milestones he achieved but the principles he upheld-principles that will continue to guide the school and its students for many years to come. His memory is a beacon that will forever light the path for future generations of learners, educators and leaders.

# மீள் வாழ்வளிக்கும் சுசிலம் பவுண்டேசன்

-டெ.றொசைறோ

மக்களால் ஒன்றிணைந்த மீள்வாழ்வளிக்கும் திட்டம் சுசிலன் பவுண்டேசன் அமைப்பின் அனுசரணையில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலிற்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரவிற்குட்பட்ட மக்களுக்கான நலன்புரி உதவிகளை வழங்கி வைக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன. அந்தவகையில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன் அவர்களின் தலைமையில் ஜூன் மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் வழங்கிவைக்கப்பட்டதுடன் அன்னமலை-02 கிராம அலுவலர் பிரிவிலுள்ள குடியிருப்புமுனை கிராம மக்களுக்கான அன்னதானம் வழங்கும் நிகழ்வு 2025 ஜூன் மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்றது.

சுசிலம் பவுண்டேசன் அமைப்பின் இணைப்பாளர் திரு. ந. கஜானந் அவர்கள் இவ் உதவித்திட்டங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்ததுடன், இவ் அமைப்பின் உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். மேலும் நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரிவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.



















# மண் மற்றும் நீர் வளங்கள் மீதான மனித செயற்பாடுகளில் சுற்றுச் சூழல் தாக்கங்கள் மற்றும் நிலையான சுற்றுச் சூழல் வளமேலாண்மையின் அவசியம்.





பூமியின் இயற்கை வளங்களில் மண் மற்றும் நீர் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. இவை மனித வாழ்விற்கும் சுற்றுப்புற சூழலுக்கும் அடிப்படையான ஆதாரங்கள் என்பதால் அவற்றின் பாதுகாப்பும் நிலையான வளர்ச்சியும் நமது முக்கியமான பொறுப்பாக இருக்கின்றது. மண் மற்றும் நீர் வளங்கள் காலநிலை, உயிரனங்களின் வாழ்விடங்கள் மற்றும் இயற்கைச் சூழல் சமநிலையை கட்டியெழுப்புகின்றன. ஆனால் இன்றைய நவீன கால உலகில் மனிதனால் மேற்கொள்ளப்படும் விவசாய நடைமுறைகள், தொழிற்சாலை மாசுபாடுகள், நகரமயமாதல் போன்ற செயற்பாடுகள் இந்த வளங்களின் அழிவிற்கு காரணமாகின்றன. உதாரணமாக அதிகரித்த உரப்பயன்பாடுகள் கிருமிநாசினிகள் மற்றும் முறையற்ற வகையில் விவாசய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனால் மண்ணின் இயல்பான உருவமைப்பு மற்றும் நீர்நிலைத் தாவரங்களும் பாதிக்கப்படுகின்றன.

மண்வளங்களில் ஏற்படும் மாறுபாடுகள் அல்லது மாசுகள், குறிப்பாக மண்ணரிப்பு மற்றும் உப்புமயமாதல் போன்ற பிரச்சினைகள் விவசாய உற்பத்திக்கு தீங்கு விளைவிக்கின்றன. குறிப்பாக புவி வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றத்தால் மண்ணின் ஈரப்பதம் குறைந்து உயிரின வாழ்விற்கு தேவையான மூலக்கூறுகள் இழக்கப்படுகின்றன. இதனால் மண்ணின் உயிரின வளமும் குறைந்து மண்ணின் விவசாய நிலங்களின் சீர்கேடுகளும் அதிகரித்து வருகின்றன. மண்ணின் சரியான பராமரிப்பு இல்லாமல் இருந்தால் நிலத்தடி நீரினுடைய தாங்குதிறனும் குறைந்து வெள்ளப் பெருக்கின் அபாயமும் அதிகரிக்கும்.

நீர் வளங்கள் மனித உயிர்க்கும் சூழலியற் செயற்பாடுகளுக்கும் அவசியமான பெறுமதி வாய்ந்த வளமாகும். இருப்பினும் நீர் நிலைகள் தொழிற்சாலை கழிவு, நீர் விவசாய இரசாயணங்கள் மற்றும் ஏனைய மனித செயற்பாடுகளால் மாசுபட்டுவருகின்றன. இதன் விளைவாக நீர் வளங்களின் தரம் குறைந்து தொற்று நோய்கள் பரவ வாய்ப்புக்களும் ஏற்படுகின்றன. மேலும் மக்களின் அதிகரித்த பயன்பாடுகளும் நீர் வளங்களின் நிலையான மேலாண்மை இன்மையால் நீரின் நிலையான பயன்பாடு மற்றும் அதன் பாதுகாப்பு தொடர்பான சவால்களையும் எதிர் நோக்க நேரிடும்.

மண் மற்றும் நீர் வளங்களுக்கு மனித நடவடிக்கைகள் காலநிலை மாற்றத்துடன் இணைந்து பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. அதிக வெப்பநிலை, பருவகால மாற்றங்கள், வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவை வளங்களின் சமநிலையை பாதிப்புக்குள்ளாக்குகின்றன. இதனால் நீர் வளங்கள் வரட்சியடைந்து மண்ணரிப்பு அதிகரித்து நிலத்தடி நீர் வளங்களின் அளவும் குறைகின்றது. இதனை எதிர்கொள்ள புவியியலாளர்கள்



மற்றும் சுற்றுச்சூழல் நிபுணர்கள் புவியியல் தகவல் தொழில்நுட்பம்(GIS) மற்றும் தொலை உணர்வு(RS) போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வளங்களின் நிலைமையினை கண்காணித்து, நிருவகிப்பதிலும் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் இவ்வாறான வளங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களை முறையாக அறிந்து அவற்றை சரி செய்ய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க முடிகின்றது.

இத்தகைய வளங்கள் பாதிக்கப்படுவதால் ஏற்படும் தாக்கங்கள் சுற்றுச் சூழலை தாண்டி மனித சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பை நேரடியாகப் பாதிக்கின்றன. உலகின் பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரம் இயற்கை வளங்களுடன் நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளது. குறிப்பாக விவசாயம் கால்நடைவளர்ப்பு மற்றும் நீர் வளங்களை சார்ந்த தொழில்கள் வளங்களின் குறைபாட்டால் கடுமையாக பாதிக்கப்படுகின்றது. நீர்வளம் குன்றிய நிலங்கள், போசாக்கற்ற மண்வளங்கள் காரணமாக உணவுப் பாதுகாப்பு பாதிக்கப்படும் போது பொருட்களுக்கான கேள்விகளும் அதிகரிக்கின்றன. இதனால் வரட்சி மற்றும் வளங்களின் தரக்குறைபாடுகளால் ஏற்படும் வேலை இழப்புக்கள், கிராமப்புற மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து வாழும் நிலைமையையும் உருவாக்கின்றது. இதனால் நகரங்களில் சமூக மற்றும் பொருளாதார அழுத்தங்கள் பெருகுகின்றன. எனவே இயற்கை வளங்களை பாதுகாப்பது என்பது சுற்றுச் சூழலைக் காப்பது மட்டுமல்லாமல் சமூகநீதி மற்றும் பொருளாதார நலனையும் உறுதி செய்வதாகும்.

மண் மற்றும் நீர் வளங்களை நீடித்த முறையில் நிருவகிப்பது என்பது சிக்கலான, ஆனால் அவசியமான ஒரு பணியாகும். பல நாடுகளில் இயற்கை வளங்களை பாதுகாக்க பல்வேறு சட்டங்கள், ஒழுங்கு முறைகள் மற்றும் கொள்கைகள் இருந்தாலும் அவை நடைமுறையில் முறையாக பின்பற்றப்படாமையால் பல சந்தர்ப்பங்களில் தீவிர சிக்கல்களை எதிர் நோக்குகின்றன. உதாரணமாக சில பகுதிகளில் சட்ட ஆலோசனைகளின்றி நிலத்தடி நீரினை பெற்றுக்கொள்ள ஆழ்துளைக் கிணறுகளை உருவாக்கல் மற்றும் நதிக்கரைகள், நீர்நிலைகளை ஆக்கிரமித்தல் போன்ற பல செயற்பாடுகள் ஏற்படுகின்றன. இவ்வாறானவற்றை கட்டுப்படுத்த நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி கண்காணிப்பு செய்யும் திறனும், பொதுமக்களின் பங்கேற்பும் அவசியமாகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் பல்வேறு சட்ட திட்டங்களையும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் உருவாக்குதல் வேண்டும். அத்துடன் பாடசாலைக் கல்வி முதல் பல்கலைக்கழகங்கள் வரை சுற்றுச் சூழல் தொடர்பான விடயங்களை மேம்படுத்தப்பட வேண்டும். மாணவர்கள் இயற்கை வளங்களின் முக்கியத்துவத்தையும், அவற்றின் மேலாண்மை முறைகளையும் விரிவாக புரிந்து கொள்ளும் வகையில் பாடத்திட்டங்களை அமைத்தல் இவ்வாறான முறையான கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலம் மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை குறைத்து சுற்றுச் சூழலையும் இயற்கை வளங்களையும் பாதுகாத்து வருங்கால சந்ததிகளுக்கு ஒப்படைக்க முடியும். நிலையான சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்காக இயற்கை வளங்களில் மனிதனால் ஏற்படும் தாக்கங்களை குறைத்து சுற்றுச் சூழலை பாதுகாப்போம்.

**பு.யேகாந்தன்**
**பிரதேச செயலகம்**
**நாவிதன்வெளி**





# ஆனி மாத வருகையும் டெங்கு நோய் ஆரவாரங்களும்

ஒவ்வொரு ஆண்டுக்குரிய நாட்காட்டி வருகின்றது. அதில் தொடர்ச்சியாக ஆனி என்கின்ற மாதம் சேர்ந்தே வருகின்றது. இந்த ஆனியுடன் சேர்ந்தே டெங்கு எனும் கொடிய அரக்கனான டெங்கு காய்ச்சலும் வருகின்றது. இந்த டெங்குவினால் ஏற்படுகின்ற மரணங்களும் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டே வருகின்றது. குழந்தைகள், சிறுவர்கள், மாணவ மாணவிகள், முதியவர்கள் என்ற பல்வேறு உயிர்களை நாம் தொடர்ச்சியாக இழந்து வருகின்றோம். இந்த டெங்கு அரக்கனை ஒழிப்பதற்கென்றே தேசிய அளவில் டெங்கு ஒழிப்புத் திட்டங்களைத் தீட்டினாலும் அதன் தாக்கம் எமக்கு தொடர்ச்சியாக அழுகையையும், மரணங்களையும் ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றது.

பொதுவாக எமது நாட்டைப் பொறுத்தவரையில் நுளம்பினால் பரப்பப்படும் பல்வேறுபட்ட நோய்கள் இங்கு உலாவுகின்றன. இதில் மிக மிக ஆபத்தான டெங்கு, சிக்கன்குனியா, பறவைக்காய்ச்சல், வைரஸ்காய்ச்சல், மூளைக்காய்ச்சல், பல இன்புளுவென்சாக்கள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். தற்போது டெங்கு ஒழிப்பு சம்பந்தமாக கிராம, பிரதேச, மாவட்ட, தேசிய மட்டம் வரைக்குமான அறிக்கைகள் கோவைகளில் கடமைக்காக பாதுகாக்கப்படுகின்றன. நுளம்புப் பிரச்சினை என்பது வெறும் சுகாதாரப் பிரச்சினை என்ற வரையறைக்குள் போட்டுவிட்டு கண்களை மூடிக்கொண்டிருக்க முடியாது. சட்டங்களை உருவாக்கி பொது மக்கள் மீது குற்றங்களை சுமத்திவிட்டு நீதிமன்றத்தில் கூண்டுக்குள் ஏற்றி தண்டம் அறவிடுதல், சிறையிலடைத்தல் என்பவற்றால் கொடிய நுளம்பு அரக்கன் ஒழியமாட்டான் என்பது திண்ணம். மிகச் சிறந்த விழிப்புணர்வு, அறிவூட்டல் என்பன முதலில் பொதுமக்களுக்கு செய்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்படும் விடயம் பொதுவான நுளம்பு ஒழிப்புத் திட்டமாகும். வீடுகள், தோட்டங்கள், நீர்நிலைகளை சுத்தப்படுத்துவதால் ஓரளவு நுளம்பினைக் கட்டுப்படுத்தலாம்.

கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் காடுகள், காணி நிலங்கள், பற்றைகள் இவற்றோடு மிக முக்கியமான விடயம் நகரமயமாக்கலில் அமைக்கப்பட்ட வடிகான்கள், நீர் நிலைகள் அசுத்தமான நிலையில் நீரோட்டம் இல்லாமல் தேங்கியிருந்து அசுத்தமான துர்நாற்றம் வீசுதல், சூழல் மாசடைதல் என்பவற்றால் அவைகள் பல்வேறு



சுற்றாடல் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. எனவே தேசிய அபிவிருத்தியில் எங்களை வளப்படுத்துகின்ற பல பகுதிகளில் (நான் இங்கு விசேடமாகக் குறிப்பிடுவது பொது இடங்கள்) சரியாக பராமரிக்கப்படல் வேண்டும்.

நுளம்புகள் ஒழிப்பு எனும்போது இரண்டாம் உலகப்போர் இடம்பெற்ற பின்னரான காலப்பகுதிகளில் மலேரியா, யானைக்கால் நோய் என்பவற்றால் உலக அளவில் பல மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இந்த வேளையில் நுளம்புகளை அழிப்பதற்கான **Anti Mosquito Campaign, Antimalaria Campaign, Anti file Zia Campaign,** இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு **1960-1980** காலப்பகுதிகளில் மேற்கூறப்பட்ட மலேரியா, யானைக்கால் நோய் என்பன இலங்கையில் முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தது என்பதை நாம் அறியக்கூடியதாயுள்ளது. எனவே இங்கு வருடா வருடம் டெங்கு என்று ஒப்பாரி வைப்பதும் பொதுமக்கள் மீது சட்டத்தை பாய்ச்சி சோதனை செய்ய வீட வீடாக வருகின்றோம் என திகிலூட்டுவதும் மற்றும் அறிக்கைகள் பெறுவதிலும் காலங்களைக் கடத்தாமல் செயற்படுதல் வேண்டும். ஏனென்றால், இந்த ஆனி மாதம் என்பது மனித குலம் அழியும் வரை வந்து கொண்டேயிருக்கும்.

பருவ காலங்களும், இயற்கையும் இப்போது மனிதர்களுக்கெதிரான செயற்பாட்டை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது. (மனிதர்களின் நடத்தைகளால்)

ஆதலால் எமது நாட்டில் யுத்த சூழல் நிறைவடைந்து அதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஆளணியான இராணுவம் மற்றும் விசேட படையினர் முகாம்களுள் இருந்து வெவ்வேறு பணிகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களை தேசிய ரீதியாக ஒன்றிணைத்து நாடளாவிய ரீதியிலான நுளம்பு ஒழிப்புத் திட்டம் ஒன்றினை உருவாக்கி அதாவது இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட மலேரியா, யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் வெற்றி பெற்ற நிலையை உருவாக்க அவற்றைத் தூசி தட்டி புதுப்பித்து நாம் இதனை செயற்படுத்தலாம். கடந்த காலங்களில் நுளம்புப் பரவலுக்கு எதிராக பக்ரீரியாக்களை இறக்குமதி செய்து அவற்றின் மூலமாக கட்டுப்படுத்தல் என்னும் நவீன தொழில்நுட்பத்துடனான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு அதுவும் இடை நிறுத்தப்பட்டதாக அறியக்கூடியதாகவுள்ளது.



எனவே இவை போன்ற நடவடிக்கைகளையும் மேலை நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்படுத்துவதன் மூலம் நுளம்புகளை ஒட்டு மொத்தமாக ஒழிக்கலாம் என்பது எடுத்துக்காட்டு. இதன் மூலம் மனித குலத்தை அழிவிலிருந்து பாதுகாத்த பெருமை எங்களைச் சேரும் என்பது திண்ணம்.

கி.யோகலிங்கம்
பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி



# இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கான மெய்நிகர் கல்வி நன்மைகள் மற்றும் சவால்கள்

எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்கும் கல்வி முதுகெலும்பாகும், மேலும் இலங்கையில், கல்வி அபிவிருத்தியானது சமூக முன்னேற்றத்தின் ஒரு முக்கிய உந்துசக்தியாகவும் இருந்து வருகிறது. பொருளாதார வளர்ச்சி மந்தம், மற்றும் COVID-19 தொற்றுநோய் போன்ற எதிர்பாராத உலகளாவிய மற்றும் உள்நாட்டிற்குரிய சவால்களின் மத்தியிலும், தொழில்நுட்ப முன்னேற்றங்களின் காரணமாகவும் பாடசாலை மாணவர்களிடையே தொடர்ச்சியான கற்றலை உறுதி செய்வதற்கான ஒரு முக்கிய தீர்வாகவும், உலகளாவிய தொழில்நுட்ப முன்னேற்றங்களின் பங்குதாரர்களாக எமது பிள்ளைகளும் மாறிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலும் இலங்கையிலும் மெய்நிகர் கல்வி பிரசித்தம் பெற்றது. நிகழ்நிலைக் கற்றல் பல நன்மைகளை வழங்கும் அதே வேளையில், அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வியை உறுதி செய்வதற்கு மேலும் தீர்க்கப்பட வேண்டிய தனித்துவமான சவால்களையும் இது கொண்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கான மெய்நிகர் கல்வியுடன் தொடர்புடைய நன்மைகள் மற்றும் சவால்கள் குறித்து இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

## இலங்கையில் மெய்நிகர் கல்வியின் எழுச்சி

இலங்கையில் இணையவழிக் கற்றல் என்று அழைக்கப்படும் மெய்நிகர் கல்வி, பல காரணிகளால் முக்கியத்துவம் பெற்றுள்ளது. முக்கியமாக தொற்றுநோய் காரணமாக பாடசாலைகள் செயற்பட முடியாமல் போனதால் கல்வித் துறையில் டிஜிட்டல் கற்றல் முறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தைத் துரிதப்படுத்தியது. கற்பித்தல் மற்றும் கற்றலை எளிதாக்க பாடசாலைகள் Zoom, Microsoft Teams மற்றும் Google Classroom போன்ற நிகழ்நிலைத் தளங்களுக்கு மாறின. இணைய இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப வளங்களை விநியோகித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள் மூலம் அரசாங்கத்தின் முயற்சிகளும் டிஜிட்டல் கல்வியை ஆதரித்தன.

இப்படிப்பட்ட முயற்சிகள் எமது நாட்டில் முடுக்கிவிடப்பட்டபோதிலும், மெய்நிகர் கல்வியை நோக்கிய மாற்றம், இணைய அணுகல், தொழில்நுட்ப அறிவு மற்றும் ஈடுபாடு ஆகியவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் முழுமையான வெற்றியை அடைவதில் சவால்களாக உள்ளன. இந்த அணுகுமுறையின் நன்மைகள் மற்றும் சவால்கள் இரண்டையும் புரிந்துகொள்வது இலங்கையின் கல்வி முறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கான மெய்நிகர் கல்வியின் நன்மைகள்

### *1.* கல்வியின் அணுகல் மற்றும் தொடர்ச்சியான தன்மை

மெய்நிகர் கல்வியின் மிக முக்கியமான நன்மைகளில் ஒன்று, இடையூறுகள் இருந்தபோதிலும் கற்றலில் தொடர்ச்சியை உறுதி செய்யும் திறன் ஆகும். இயற்கைப் பேரழிவுகள், பொருளாதார நெருக்கடிகள் அல்லது தொற்றுநோய்கள் காரணமாக பாடசாலைகள் இயங்காது போனாலும் நிகழ்நிலைக் கல்வி மாணவர்கள் எங்கிருந்தும் கற்றுக்கொள்ள உதவுகிறது. இது தடைகள் இல்லாமல் கல்வி முன்னேற்றத்தைப் பேணிக்கொள்ள உதவுகிறது. அறிவைப் பெற்றுக்கொள்வதில் நிலைத்த தன்மையை இது உறுதிசெய்கிறது.

## 2. நெகிழ்வுத்தன்மை மற்றும் வசதி

மெய்நிகர் கல்வி மாணவர்கள் தங்கள் சொந்த வேகத்திலும் தமக்கு சௌகரியமான முறையிலும் கற்றுக்கொள்ள அனுமதிக்கிறது. சிக்கலான எண்ணக்கருக்களைப் புரிந்துகொள்ள கூடுதல் நேரம் தேவைப்படும் மாணவர்களுக்கு அல்லது விஷேட கற்றல் தேவைகள் உள்ளவர்களுக்கு இந்த நெகிழ்வுத்தன்மை குறிப்பாக நன்மை பயக்கும். நிகழ்நிலைப் பாடங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். இதனால் மாணவர்கள் தேவைப்படும் போதெல்லாம் பதிவு செய்துகொண்ட அந்தக் கற்றல் வளங்களை மீண்டும் பார்வையிட முடியும்.

## 3. உலகளாவிய கற்றல் வளங்களுக்கான வெளிப்பாடு

டிஜிட்டல் கற்றல் மாணவர்களுக்கு மின் நூல்கள், காணொளிப் பயிற்சிகள் மற்றும் ஈடுபாட்டுடன் கற்கக்கூடிய கற்றல் வளங்கள் உள்ளிட்ட ஏராளமான நிகழ்நிலை கல்விச் சாதனங்களை அணுக உதவுகிறது. கான் அகாடமி மற்றும் கோசேரா போன்ற சர்வதேச கல்வி தளங்கள் இலங்கை மாணவர்களுக்கு பாரம்பரிய பாடத்திட்டங்களுக்கு அப்பாற்பட்டு பல்வேறு திறன்களை விருத்தி செய்துகொள்ளக்கூடிய பாடநெறிகளை அணுகும் வாய்ப்புகளை வழங்குகின்றன.



## 4. ஈடுபாட்டுடன் கூடிய கற்றல் முறைகள்

நிகழ்நிலைக் கல்வியானது விளையாட்டு வடிவமாக்கப்பட்ட கற்றல், வினாடி வினாப்போட்டிகள் மற்றும் விளக்கக்காட்சிகள் போன்ற புதுமையான கற்பித்தல் முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இது பாடங்களை மிகவும் ஈடுபாட்டுடன் கற்றுக் கொள்வதை எளிதாக்குகிறது. தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கிறது. அத்துடன் மாணவர்கள் தங்கள் கல்விச் செயன்முறையில் பங்கேற்பாளர்களாக மாறுவதையும் ஊக்குவிக்கிறது.

## 5. டிஜிட்டல் அறிவுத் திறன்களின் வளர்ச்சி

இன்றைய டிஜிட்டல் யுகத்தில், தொழில்நுட்பத் திறன் அவசியம். மெய்நிகர் கற்றல் மாணவர்கள் டிஜிட்டல் அறிவுத் திறன்களுடன் வளர்ச்சி பெறுவதை ஊக்கப்படுத்துகிறது. தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் எதிர்கால வாழ்க்கைக்கு அவர்களைத் தயார்படுத்துகிறது. நிகழ்நிலைக் கருவிகளை முன்கூட்டியே அறிந்துகொள்வது அவர்களின் எதிர்காலத்திற்கான இசைவுத் தன்மையை வளர்ப்பதுடன் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்களையும் மேம்படுத்துகிறது.

## 6. செலவு குறைந்த கல்வி

நிகழ்நிலைக் கல்வி, பாரம்பரிய பாடசாலைப் படிப்புடன் தொடர்புடைய உள்கட்டமைப்பு,



போக்குவரத்து மற்றும் பிற செலவுகளுக்கான தேவையைக் குறைக்கிறது. பெற்றோர்கள் பயணம் மற்றும் கற்றல் பொருள்கள் கொள்வனவு செய்தல் தொடர்பான செலவுகளைக் குறைத்து பணத்தைச் சேமிக்க முடியும். இம் முறையின் மூலம் பல மாணவர்களுக்கு கல்வி மிகவும் மலிவான விலையில் கிடைக்கும் என்பதை உறுதிசெய்யலாம்.

### 7. தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்ப கிடைக்கக்கூடிய கற்றல் அனுபவங்கள்

மெய்நிகர் கல்வி வெவ்வேறு ஆற்றல் நிலைகளில் உள்ள மாணவர்களின் விருப்பங்கள் மற்றும் திறன்களின் அடிப்படையில் கற்றல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கிறது. செயற்கை நுண்ணறிவு கொண்டு இயக்கப்படும் சில கற்றல் மென்பொருட்கள் மாணவர்களின் பலம் மற்றும் பலவீனங்களை பகுப்பாய்வு செய்து அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப பாடங்கள் வழங்கப்படும் முறைகளை வடிவமைக்கின்றன.

## இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கான மெய்நிகர் கல்வியில் உள்ள பிரச்சனைக்குரிய விடயங்கள்

### 1. தொழில்நுட்பம் மற்றும் இணைய இணைப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல்

டிஜிட்டல் உள்கட்டமைப்பில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், இலங்கையில் கணிசமான பகுதி மாணவர்களுக்கு நம்பகமான இணைய இணைப்புகள் மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள் கிடைப்பதில்லை. கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய சமூகங்கள் மடிக்கணினிகள், திறன்பேசிகள் மற்றும் இணைய சேவைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன. இது கல்வி வழங்கலில் சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.

### 2. டிஜிட்டல் பிளவு மற்றும் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

இலங்கையின் மெய்நிகர் கல்வி முறையில் டிஜிட்டல் பிளவு ஒரு முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது. பணவசதி பெற்ற பின்னணியைச் சேர்ந்த மாணவர்கள் மேம்பட்ட தொழில்நுட்ப வளங்களிலிருந்து பயனடைகிறார்கள். அதே நேரத்தில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் போதுமான சாதனங்கள் அல்லது இணைப்புகளைப் பெற்றுக்கொள்ளப் போராடுகிறார்கள். இந்த இடைவெளி சமத்துவமான கல்வியைப் பெற்றுக்கொள்வதில் ஏற்றத்தாழ்வுகளை விரிவுபடுத்துகிறது.

### 3. குறைக்கப்பட்ட ஆசிரியர்-மாணவர் இடைத் தொடர்பு

பாரம்பரிய வகுப்பறைகள் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான நேருக்கு நேர் தொடர்புகளை வழங்குகின்றன. இதனால் மாணவர்கள் பாடங்களைப் புரிந்து கொண்ட அளவை ஆசிரியர்கள் மதிப்பிடவும் உடனடிப் பரிகார நடவடிக்கைகளை எடுக்கவும் முடியும். மெய்நிகர் கல்வி நேரடி ஈடுபாட்டைக் கட்டுப்படுத்துகிறது. இதனால் ஆசிரியர்கள் கற்றலில் இடர்படும் மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் கற்றல் சவால்களை திறம்பட நிவர்த்தி செய்வதை கடினமாக்குகிறது.



## 4. கவனம் மற்றும் ஈடுபாடு தொடர்பான சவால்கள்

அனைத்து மாணவர்களும் மெய்நிகர் கற்றல் சூழலில் செழித்து வளர்வதில்லை. பல மாணவர்கள் வீட்டில் கவனச்சிதறல்களால் சிரமப்படுகிறார்கள். சிலரிடையே ஊக்கமின்மை காணப்படுகின்றது. சிலர் திரை சார்ந்த பாடங்களில் கவனம் செலுத்துவதில் சிரமத்தை அனுபவிக்கிறார்கள். நீண்ட நேரம் கொண்ட நிகழ்நிலைக் கற்றல் மனச் சோர்வுக்கு வழிவகுப்பதுடன் மாணவர்களின் செயல்திறனையும் குறைக்கும்.

## 5. மதிப்பீடு சார்ந்த சிரமங்கள்

மெய்நிகர் மதிப்பீடுகள் நியாயத்தன்மை மற்றும் துல்லியத்தை உறுதி செய்வதில் சவால்களை ஏற்படுத்துகின்றன. நிகழ்நிலைத் தேர்வுகள் மற்றும் பணிகள் நேர்மையின்மைக்கும் வழி விடக்கூடும். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களின் உண்மையான திறன்களை மதிப்பிடுவது கடினம். முக்கியமாக, விஞ்ஞானப் பாடங்கள் தொடர்பான பரிசோதனைகள் மற்றும் கவின் கலைத் திறன்கள் போன்ற விடயங்களில் நிகழ்நிலை மூலம் போதுமான அளவு மாணவர்களை மதிப்பிட முடியாது.

## 6. சமூக வளர்ச்சியில் தாக்கம்

கல்வி என்பது அறிவு மற்றும் திறன்களைப் பெற்றுக்கொள்வது மட்டுமல்ல இது மாணவர்கள் சமூகத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் உறவுகளை உருவாக்குவதற்குமான ஒரு வழியுமாகும். மெய்நிகர் கற்றல் சகாக்களின் தொடர்புகளை கட்டுப்படுத்துகிறது. இது குழுப்பணி, தொடர்பாடல் மற்றும் உணர்வுசார் நுண்ணறிவு வளர்ச்சி போன்றவற்றுக்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது.

## 7. ஆசிரியர் பயிற்சி மற்றும் தகவமைப்பு சிக்கல்கள்

அனைத்து ஆசிரியர்களும் பயனுள்ள நிகழ்நிலைக் கற்பித்தலுக்குத் தேவையான திறன்களைக் கொண்டிருப்பதில்லை. மெய்நிகர் கல்விக்கு மாறுவதற்கு டிஜிட்டல் கருவிகள், ஊடாடும் முறைகள் மற்றும் நிகழ்நிலை வகுப்பறை முகாமைத்துவம் ஆகியவற்றில் விரிவான ஆசிரியர் பயிற்சி தேவைப்படுகிறது. போதுமான தயாரிப்பு இல்லாமல் மேற்கொள்ளப்படும்போது, நிகழ்நிலைக் கற்பித்தலானது செயல்திறன் இல்லாமல் போகலாம்.

## 8. மனநலம் மற்றும் நல்வாழ்வு தொடர்பான கரிசனைகள்

அதிகரித்த திரை நேரம் மற்றும் பாரம்பரிய வகுப்பறை அமைப்புகளிலிருந்து தனிமைப்படுத்தப்படுவது மாணவர்களின் மன ஆரோக்கியத்தை பாதிக்கும். தனிமை, பதட்டம் மற்றும் மன அழுத்தம் போன்ற உணர்வுகள் அதிகரிக்கக்கூடும். மெய்நிகர் கற்றல் சூழல்களை அணுக சிரமப்படும் குழந்தைகளுக்கும்கூட தாம் அடைந்து கொள்ள முடியாத வசதி குறித்து கவலையும் அதன் விளைவாக பல்வேறு மன அழுத்தங்களும் ஏற்படலாம்.

## 9. சைபர் பாதுகாப்பு மற்றும் நிகழ்நிலைப் பாதுகாப்பு அபாயங்கள்

அதிகரித்த நிகழ்நிலைக் கற்றலுடன், மாணவர்கள் சைபர் மிரட்டல், தரவு மீறல்கள் மற்றும் நிகழ்நிலை வேட்டையாடுபவர்களால் ஏற்படும் பாதிப்புகள் போன்ற அபாயங்களுக்கு ஆளாகிறார்கள். சைபர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாதது மாணவர்களை டிஜிட்டல் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கக்கூடும்.

### 10. தொழில்நுட்பத்தை சார்ந்திருத்தல் மற்றும் குறைக்கப்பட்ட நடைமுறை கற்றல் வாய்ப்புகள்

டிஜிட்டல் கல்வியை அதிகமாக நம்பியிருப்பது பாரம்பரிய நடைமுறை கற்றல் அனுபவங்களின் சரிவுக்கு வழிவகுக்கும். உடற்கல்வி, ஆய்வகப் பரிசோதனைகள் மற்றும் கவின் கலைகள் போன்ற பாடங்களுக்கு வழமையான கற்றல் நடைமுறை தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட விடயங்களைக் கற்றுக்கொள்ள மெய்நிகர் கற்றல் முறைகளால் முழுமையாகப் பங்களிக்க முடியாது.

## தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள்

இலங்கையில் மெய்நிகர் கல்வியின் சவால்களை எதிர்கொள்ள பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

1. உள்கட்டமைப்பு மேம்பாடு: கிராமப்புறங்களில் இணைய அணுகலை விரிவுபடுத்துதல் மற்றும் மலிவு விலையில் தொழில்நுட்ப வளங்களை வழங்குதல்.

2. அரசாங்க ஆதரவு: நிகழ்நிலைக் கல்விக்கான சம வாய்ப்புகளை உறுதி செய்வதற்கான கொள்கைகளை செயற்படுத்துதல்.

3. ஆசிரியர் பயிற்சி: ஆசிரியர்கள் தங்கள் டிஜிட்டல் கற்பித்தல் திறன்களை மேம்படுத்த தொழில்வாண்மை மேம்பாட்டுத் திட்டங்களை வழங்குதல்.

4. மாணவர் ஈடுபாட்டு உத்திகள்: ஊக்கத்தைப் பராமரிக்க ஊடாடும் கூறுகள் மற்றும் கலப்பின கற்றல் மாதிரிகளை இணைத்தல்.

5. சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு: நிகழ்நிலைப் பாதுகாப்பு குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு அளித்தல் மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.

6. மனநல ஆதரவு: மெய்நிகர் கற்றலுக்கு ஏற்றவாறு மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

7. கலப்பின கற்றல் மாதிரிகள்: கற்றல் அனுபவங்களை சமநிலைப்படுத்த நிகழ்நிலை மற்றும் வழக்கமான பாடசாலைக் கற்பித்தல் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்தல்.

மெய்நிகர் கல்வி இலங்கையில் கல்விப் புலத்தில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது, நெகிழ்வுத்தன்மை, அணுகல் மற்றும் உலகளாவிய வளங்களுக்கான வெளிப்பாடு ஆகியவற்றை வழங்குகிறது. இருப்பினும், அதன் வெற்றி தொழில்நுட்ப ஏற்றத்தாழ்வுகள், ஆசிரியர் பயிற்சி, மாணவர் ஈடுபாடு மற்றும் மனநலக் கரிசனைகள் போன்ற தற்போதைய சவால்களை நிவர்த்தி செய்வதைப் பொறுத்தது. டிஜிட்டல் முன்னேற்றங்களை பாரம்பரிய வகுப்பறை முறைமைகளுடன் இணைக்கும் ஒரு சமநிலையான அணுகுமுறை, பயனுள்ள ஒரு கல்வி முறையை உருவாக்க உதவ முடியும். தந்திரோபாய தீர்வுகளை செயல்படுத்துவதன் மூலம், மேலும் இசைவாக்கக்கூடிய, சமத்துவமான, ஒப்புரவு மிக்க முற்போக்கான கற்றல் சூழலை இலங்கைப் பாடசாலைக் குழந்தைகளுக்கு உருவாக்கிக் கொடுக்க மெய்நிகர் கல்வியைப் பயன்படுத்தலாம்.

### நிகழ்நிலைக் கல்வியை பாதுகாப்பானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுதல்: மாணவர்களுக்கான வழிகாட்டுதல்

மாணவர்கள் கற்கும் விதத்தை நிகழ்நிலைக் கல்வி மாற்றியுள்ளது, நெகிழ்வுத்தன்மை, அணுகல்தன்மை மற்றும் பரந்த அளவிலான வளங்களை அது அவர்களுக்கு வழங்குகிறது. இருப்பினும், பாதுகாப்பாக இருக்கும் அதே வேளையில் டிஜிட்டல் கற்றலை அதிகம் பயன்படுத்த, மாணவர்கள் தொழில்நுட்ப ஆர்வலர்களாகவும் எச்சரிக்கை உணர்வுடையோராகவும் இருக்க வேண்டும். நிகழ்நிலைக் கல்வியை பாதுகாப்பாகவும் திறம்படவும் பயன்படுத்துவதற்கான சில அத்தியாவசிய குறிப்புகள் இங்கே தரப்படுகின்றன.

## 1. சைபர் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுத்தல்

இணையம் ஒரு மதிப்புமிக்க கல்வி வழங்கும் கருவியாகும். ஆனால் அது ஆபத்துகளால் நிறைந்துள்ளது. மாணவர்கள் தங்கள் கல்வி கணக்குகளுக்கு வலுவான, தனித்துவமான கடவுச்சொற்களைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் காலத்திற்குக் காலம் அவற்றை தொடர்ந்து மாற்ற வேண்டும். முடிந்தவரை பயனரின் அடையாளத்தை உறுதி செய்வதற்கு இரு வேறுபட்ட அடையாள முறையை இயக்குவது கூடுதல் பாதுகாப்பைச் சேர்க்கிறது. அறியப்படாத இணைப்புகளைச் சொடுக்குவதையோ அல்லது நம்பத்தகாத மூலங்களிலிருந்து இணைப்புகளைப் பதிவிறக்குவதையோ தவிர்க்கவும். ஏனெனில் இவை கணினி முறைமைக்கு தீங்கு விளைவிக்கும் மென்பொருள்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்களைப் களவாடுதல் போன்ற மோசடிகளுக்கு வழிவகுக்கும்.

## 2. நம்பகமான தளங்களைப் பயன்படுத்தல்

உங்கள் பாடசாலை அல்லது ஆசிரியர்களால் பரிந்துரைக்கப்படும் புகழ்பெற்ற கல்வி தளங்களை எப்போதும் பயன்படுத்தவும். இந்த தளங்கள் உங்கள் தரவைப் பாதுகாக்க பாதுகாப்பான அமைப்புகளைக் கொண்டிருக்க அதிக வாய்ப்புள்ளது. அதிகாரப்பூர்வமற்ற வலைத்தளங்களில் அல்லது நிகழ்நிலையில் அந்நியர்களுடன் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதைத் தவிர்க்கவும். தெளிவான தனியுரிமைக் கொள்கைகள் மற்றும் நேர்மறையான மதிப்புரைகளைக் கொண்ட தளங்களில் மட்டும் உலவவும்.

## 3. ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் நேரத்தை புத்திசாலித்தனமாக நிர்வகித்தல்

நிகழ்நிலைக் கற்றலின் சவால்களில் ஒன்று நேர முகாமைத்துவம். ஒரு நிலையான வகுப்பு நேர அட்டவணை இல்லாமல், இதில் ஈடுபடுவது அபத்தமானது. படிப்பதற்கான நேரம், இடைவேளைகள் மற்றும் ஓய்வெடுப்பதற்கான நேரம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு தினசரி வழக்கத்தை உருவாக்குங்கள். பணிகள் மற்றும் காலக்கெடுவைத் தொடர்ந்து கண்காணிக்க டிஜிட்டல் நாள்காட்டிகள் அல்லது பணி முகாமைத்துவ செயலிகளைப் பயன்படுத்தவும்.

## 4. கல்வி ஒருமைப்பாட்டைப் பேணுதல்.

நீங்கள் வீட்டிலிருந்து கற்றுக்கொள்கிறீர்கள் என்பதற்காக நீங்கள் எப்படியும் கற்றுக்கொள்ளலாம் என்று அர்த்தமல்ல. கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய புலமைச்சொத்து திருட்டு மற்றும் ஏமாற்று வேலைகளைத் தவிர்க்கவும். நேர்மையாக இருக்க உதவும் திருட்டு சரிபார்ப்புகள் மற்றும் மேற்கோள் ஜெனரேட்டர்கள் போன்ற நிகழ்நிலைக் கருவிகளைப் பயன்படுத்தவும். தேர்வில் தேர்ச்சி பெறுவதை விட, பாடத்தைக் கற்றுக்கொள்வது மிகவும் மதிப்புமிக்கது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## 5. உங்கள் மன ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும்

நிகழ்நிலையில் அதிக நேரம் செலவிடுவது சோர்வை ஏற்படுத்தும். உடற்பயிற்சி, பொழுதுபோக்குகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பழகுவது போன்ற செயற்பாடுகளுக்கு நேரம் ஒதுக்குங்கள். நிகழ்நிலைக் கற்றல் அதிகமாக இருப்பதை உணர்ந்தால், ஆசிரியர், ஆலோசகர் அல்லது நம்பகமான பெரியவரிடம் பேசுங்கள்.

## 6. ஈடுபாட்டுடன் இருங்கள் மற்றும் உதவி கேளுங்கள்.

நிகழ்நிலைக் கற்றலுக்கு சுய உந்துதல் தேவை. கலந்துரையாடல்களில் தீவிரமாகப் பங்கேற்கவும், பணிகளை சரியான நேரத்தில் முடிக்கவும்,

கேள்விகளைக் கேட்கத் தயங்காதீர்கள். நீங்கள் சிரமப்பட்டால், உங்கள் ஆசிரியர் அல்லது வகுப்பு தோழர்களை ஆதரவுக்காகத் தொடர்பு கொள்ளவும். முடிவாகக் கூறப்போனால், புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தப்படும்போது நிகழ்நிலைக் கல்வி ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருக்கும். பாதுகாப்பாகவும், ஒழுங்கமைக்கப்பட்டதாகவும், முன்முயற்சியுடன் இருப்பதன் மூலமும், மாணவர்கள் தங்கள் கல்வியில் வெற்றி மற்றும் தனிப்பட்ட நல்வாழ்விற்கு உதவியளிக்கும் பாதுகாப்பான மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட கற்றல் சூழலை உருவாக்க முடியும்.

**பெற்றோருக்கு வழிகாட்டுதல்: குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் பயனுள்ள நிகழ்நிலைக் கல்வியை உறுதி செய்தல்**

நிகழ்நிலைக் கல்வி நவீன கற்றலின் ஒரு முக்கிய பகுதியாக மாறியுள்ளது, நெகிழ்வுத்தன்மையையும் எங்கிருந்தும் தரமான வளங்களை அணுகுவதையும் அது வழங்குகிறது. இருப்பினும், அது உண்மையிலேயே பயனுள்ளதாக இருக்க, பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் நிகழ்நிலைக் கற்றல் சூழலைப் பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுகின்ற செயன்முறையில் அதிக பங்கு வகிக்க வேண்டும். டிஜிட்டல் கல்வி உலகில் பயணிக்கும் பெற்றோருக்கான சில முக்கியமான குறிப்புகள் இங்கே தரப்பட்டுள்ளன.

### 1. பாதுகாப்பான டிஜிட்டல் சூழலை உருவாக்குதல்

வீட்டில் பாதுகாப்பான மற்றும் வசதியான கற்றல் இடத்தை அமைப்பதன் மூலம் இதைத் தொடங்குங்கள். உங்கள் குழந்தை பயன்படுத்தும் சாதனத்தில் புதுப்பிக்கப்பட்ட வைரஸ் தடுப்பு மென்பொருள் மற்றும் பெற்றோர் கட்டுப்பாடுகள் இருப்பதை உறுதிசெய்யவும். தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொள்ளாதிருத்தல் சந்தேகத்திற்கிடமான இணைப்புகளைத் தவிர்த்தல் மற்றும் பொருத்தமற்ற உள்ளடக்கம் குறித்து புகார் அளிப்பது போன்ற இணைய பாதுகாப்பு பற்றி உங்கள் குழந்தைக்குக் கற்றுக் கொடுங்கள். உங்கள் குழந்தையின் பாடசாலை அல்லது ஆசிரியர்களால் பரிந்துரைக்கப்படும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான கல்வி தளங்களைப் பயன்படுத்தவும்.

### 2. நிகழ்நிலைச் செயற்பாட்டை மரியாதையுடன் கண்காணிக்கவும்

உங்கள் குழந்தைக்கு சிறிது சுதந்திரம் வழங்குவது முக்கியம் என்றாலும், அவர்களின் நிகழ்நிலை நடத்தையை கண்காணிப்பது மிக முக்கியம். அவர்களின் முன்னேற்றத்தை தவறாமல் சரிபார்த்து, அவர்கள் பயன்படுத்தும் வலைத்தளங்கள் அல்லது பயன்பாடுகளை மதிப்பாய்வு செய்யவும். திரை நேர வரம்புகளை அமைத்துக்கொள்ளவும் உள்ளடக்கத்தை வடிகட்டவும் உங்களை அனுமதிக்கக் கூடிய கருவிகளைப் பயன்படுத்தவும். இருப்பினும், கண்காணிப்பை நம்பிக்கையுடன் சமநிலைப்படுத்துதல் வேண்டும். நிலையான கண்காணிப்பை விட பிள்ளையுடனான திறந்த தொடர்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

### 3. வழக்கமான மற்றும் ஆரோக்கியமான பழக்கங்களை ஊக்குவிக்கவும்

உற்பத்தித்திறன் மிக்க நிகழ்நிலைக் கற்றலுக்கு கட்டமைப்பு அவசியம். பாடங்கள், வீட்டுப்பாடம், இடைவேளைகள், உணவு மற்றும் உடல் செயல்பாடுகளுக்கான நேரம் உள்ளிட்ட தினசரி அட்டவணையை உருவாக்க உங்கள் குழந்தைக்கு உதவுங்கள். வழக்கமான தூக்கத்தை ஊக்குவிக்கவும், பொழுதுபோக்கு திரை நேரத்தை கட்டுப்படுத்தவும். நன்கு கட்டமைக்கப்பட்ட நேர அட்டவணை அவர்களின் கவனத்தை ஈர்ப்பதுடன் மன அழுத்தத்தைக் குறைத்து சிறந்த கல்வி செயல்திறனை ஊக்குவிக்கிறது.



### 4. கற்றலில் நீங்களும் துடிப்புடன் ஈடுபடுங்கள்

உங்கள் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது என்பதில் தீவிர ஆர்வம் காட்டுங்கள். மெய்நிகர் பெற்றோர்-ஆசிரியர் கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள். அவர்களின் , பணிகளை மதிப்பாய்வு செய்யுங்கள். கல்வி தொடர்பான தலைப்புகளை ஒன்றாக விவாதிக்கவும். உங்கள் ஈடுபாடு கல்வியின் முக்கியத்துவத்தை வலுப்படுத்துவதுடன் உங்கள் குழந்தைக்கு அவர்கள் ஆதரிக்கப்படுகிறார்கள் என்பதையும் காட்டுகிறது.

### 5. டிஜிட்டல் பொறுப்புணர்வை கற்றுக் கொடுக்கவும்

பொருத்தமான நிகழ்நிலை நடத்தையைப் புரிந்துகொள்வதில் உங்கள் குழந்தைக்கு வழிகாட்டவும். இதில் மெய்நிகர் வகுப்பறைகளில் மரியாதையாக இருப்பது, திருட்டுத்தனத்தைத் தவிர்ப்பது மற்றும் நிகழ்நிலை வளங்களை நெறிமுறையாகப் பயன்படுத்துவது ஆகியவை அடங்கும். டிஜிட்டல் குடியுரிமையைப் பற்றிக் கற்பிப்பது அவர்கள் தொழில்நுட்பத்தின் பொறுப்பான பயனர்களாக மாற உதவுகிறது.

### 6. மன அழுத்தம் அல்லது விலகலின் அறிகுறிகளைக் கவனியுங்கள்

நிகழ்நிலைக் கற்றல் சில குழந்தைகளுக்கு தனிமைப்படுத்தப்பட்டதாகவோ அல்லது மன அழுத்தமாகவோ இருக்கலாம். பதட்டம், உந்துதல் இல்லாமை அல்லது சோர்வு போன்ற அறிகுறிகளைக் கவனியுங்கள். பிரச்சினைகள் ஏற்பட்டால், வழிகாட்டுதலுக்காக ஆசிரியர்கள் அல்லது பாடசாலை ஆலோசகர்களைத் தொடர்பு கொள்ளத் தயங்காதீர்கள்.

முடிவாக நிகழ்நிலைக் கல்வியைப் பாதுகாப்பானதாகவும், சமநிலையானதாகவும், பயனுள்ளதாகவும் மாற்றுவதில் பெற்றோர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். கற்றல் செயலில் தாமும் ஈடுபடுதல், தெளிவான தொடர்பு மற்றும் ஆரோக்கியமான எல்லைகள் மூலம், நிகழ்நிலை பாதுகாப்பாக இருக்கும்போது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் கல்வியில் வெற்றி பெற உதவலாம்.

பாலசிங்கம் சஜிந்ரன்
பாண்டிருப்பு



# மழலைச் சிரிப்பு

மழலைச் சிரிப்பின் மௌன இசை
மனதைக் கவரும் மாய விசை
புன்னகை பூக்கும் சிறு முகத்தில்
பூமியின் சொர்க்கம் சுருங்கி
அங்கே!

விழிகளின் வழியாய் தேனமுது
வார்த்தைகள் இல்லாக் காதல் ருது
தடவினால் பூக்கும் சந்தோசம்
சின்ன சிரிப்பில் பெரு மகிழ்ச்சி!

மழையில் துளிர்க்குமே அந்த சிரிப்பு
மண்ணில் பூக்குமே வானின் அருள்
அழகு என்றால் அதுதான் போதும்
அழகின் அர்த்தம் சிரிப்பில் தேடும்

வாழ்க்கையின் ஒலி அனைத்துமாயும்
மழலைச் சிரிப்பில் உலகம் நைந்து போகும்
தொட்டுமே கண்ணில் தங்கும் பார்வை
தூய்மை நிறைந்த சிரிப்பு வரம்!

சு. சுதர்சினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்



# புதைகுழி

புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்டவை
எச்சங்கள் அல்ல நடந்தவை
என்னவென்று அறிய விட்டு வைக்கப்பட்ட
மிச்சங்கள்.

காலம் முடிந்து காலனால் அழைத்துச்
செல்லப்பட்டு மாண்டு போனவர்களா?
அல்ல - பல் உயிர்களும்
பரிதவிக்க பறிக்கப்பட்டவையா?

இங்கு புதைக்கப்பட்டவை
அழிக்கப்பட்டவை என எண்ணியவர்க்கு
விதைக்கப்பட்டவை என உணர்த்தியதோ
அகழ்வாராய்ச்சி!

பிஞ்சுக் குழந்தைகளையும் கொல்லும்
ஈனப்பிறவிகள் வாழும் உலகமிது.

மிஞ்சிப்போன எலும்புகளில் தேடப்படுகிறதோ
மனிதத்தின் அடையாளம்!

சீதா வாசன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்.



# மட்டன் வெஜிடபிள் குருமா

R.Rupiga
Development Officer

## தேவையான பொருள்கள்

மட்டன் - 1kg
உருளைக்கிழங்கு - 1/4 kg
மஞ்சள் தூள் - 1/2 ஸ்பூன்
பீன்ஸ் - 1/4 kg
கேரட் - 1/4 kg
தக்காளி - 3 ஸ்பூன்
பச்சை மிளகாய் - 5
தேங்காய் - 1 பாதி
மிளகாய்த் தூள் - 2 ஸ்பூன்
இஞ்சி, பூண்டு விழுது - 2 ஸ்பூன்
பட்டை - 2
முந்திரி - 15
சோம்பு - 2 ஸ்பூன்
இலவங்கம் - 10g
ஏலக்காய் - 5
பெரிய வெங்காயம் - 4
புதினா - சிறிதளவு
கொத்தமல்லி தழை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு



## செய்முறை

* முதலில் மட்டனை நன்றாக சுத்தம் செய்து வேக வைத்துக் கொள்ள வேண்டும். பின் உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ், வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் மற்றும் கொத்தமல்லித்தாழை ஆகியவற்றைப் பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

* பின் தேங்காய், முந்திரி மற்றும் சோம்பு ஆகியவற்றை சேர்த்து மிக்ஸியில் விழுதாக அரைத்துக் கொள்ள வேண்டும். பின் ஒரு வாணலியில் எண்ணெய்யை காய வைத்து பட்டை, இலவங்கம், ஏலக்காய், பிரிஞ்சி இலை சேர்த்து தாளித்துக் கொள்ளவேண்டும்.

* பிறகு அதனுடன் நறுக்கிய வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி-பூண்டு விழுதைச் சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்க வேண்டும். பின்பு நறுக்கிய காய்கறிகள், தக்காளி, புதினா, கொத்தமல்லித்தாழை சேர்த்து வதக்கி மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் மற்றும் வேகவைத்த மட்டனை சேர்த்து உப்பு போட்டு கிளற வேண்டும்.

* கடைசியாக ஒரு கொதி வந்ததும் அரைத்த விழுதைச் சேர்த்து சிறிது நேரம் கொதித்ததும் கொத்தமல்லித்தாழையை தூவி இறக்கினால் சூப்பரான மட்டன் வெஜிடபிள் குருமா தயார்.




# சமூக பணியிலும் ஆன்மீகத்திலும் பணியாற்றி வரும் வை.ஏ.சுல்தான்

*உங்களை பற்றிய ஒரு அறிமுகத்தை தாருங்கள்*

எனது பெயர் யாசின்பாவா அஹமது சுல்தான் என்பதாகும் நான், நாவிதன்வெளி, மத்தியமுகாம் 12ஆம் கிராமம் 12/75/H/1 எனும் முகவரியில் வசித்து வருகிறேன். மர்ஹூம்களான முகம்மது இஸ்மாயில் யாசின்பாவா, அப்துல் ரகுமான் சின்னப்பிள்ளை ஆகியோருக்கு பிறந்த பதினொரு பிள்ளைகளில் ஒன்பதாவதாக பிறந்த நான் 1993.11.12ஆந் திகதி கலந்தர் லெப்பை பரீனா உம்மா அவர்களை திருமணம் முடித்து நான்கு பிள்ளைகளின் தந்தையாக வசித்து வருகிறேன்.

*கல்வித் துறையில் உங்களது பயணம் பற்றி கூறுங்கள்*

எனது ஆரம்பக் கல்வியை கமு/சது சாளம்பைக்கேணி அஸ் ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் கற்றதன் பின்னர் கல்முனை அல்ஹாமியா அறபிக் கல்லூரியில் மௌலவிப் பட்டத்தை 1989ஆம் ஆண்டு பெற்றதுடன் அல்ஆலிம் முதலாம் மற்றும் இரண்டாம் பரீட்சைகளில் சிறப்பான பெறுபேற்றை பெற்றுக் கொண்டு 1992ம் ஆண்டு நடைபெற்ற மௌலவிமார்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 1992/1993 காலப்பகுதியில் அறபுமொழி மற்றும் இஸ்லாம் பாட ஆசிரியராக கமு/சது/சென்றல்கேம்ப் ஜி.எம்.எம்.எஸ் பாடசாலையில் 1993.01.05ஆந் திகதி முதல் நியமனம் பெற்று சில காலத்தின் பின்னர் கமு/சது/வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு கடமையாற்றினேன். மீண்டும் எனது முதல் பாடசாலைக்கு இணைக்கப்பட்டு கடமையாற்றினேன். அதன் பின்னர் வருடாந்த இடமாற்றத்தின் பிரகாரம் 2009 காலப் பகுதியில் கமு/சது/சாளம்பைக்கேணி அஸ் ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் கடமை செய்துகொண்டிருக்கும்போது எனது முதல் பாடசாலைக்கு எனது தேவையின் நிமித்தம் அப்போதைய பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் அறிவுறுத்தலுக்கு இணங்க மீண்டும் கமு/சது/சென்றல்கேம்ப் ஜி.எம்.எம். எஸ் பாடசாலையில் பிரதி அதிபராக கடமை செய்து கொண்டிருக்கும்போது பொறுப்பு அதிபராக இருந்த MCA. காதர் அவர்கள் இளைப்பாறியபோது 2014.12.13ஆந் திகதி தொடக்கம் கமு/சது/சென்றல்கேம்ப் ஜி.எம்.எம். எஸ் பாடசாலையில் பொறுப்பு அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

*உங்களது சேவைக்காலத்தில் பாடசாலை வளர்ச்சிப்படி பற்றி என்ன நினைக்கின்றீர்கள்*

எனது காலப்பகுதிக்குள் பாடசாலைக்குத் தேவையான பௌதிக வளங்களைப் பெற்றுக் கொள்வதில் பல முயற்சியின் பயனாக மாகாண வலய மட்ட ரீதியாக பாடசாலைக்கு மாடிக்கட்டிடம் , அதிபர் காரியாலயம் அமைந்துள்ள மாடிக் கட்டடத்தை புனரமைப்பு செய்து மை பூசி அழகுபடுத்தப்பட்டது. அதேபோல

**Unisef, Plan Sri Lanka, Save the children** போன்ற அமைப்புகள் ஊடாக ஆரம்ப பகுதியில் பாலர் பாடசாலை மாணவர்களையும் உள்ளடக்கியதாக புனரமைப்பு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டது. மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அதிகரிக்கும் வகையில் ஆசிரியர்களைப் பெறுவதில் பல முயற்சிகளை செய்து நிறைவேற்றப்பட்டது. அப்போது அப்பாடசாலை க.பொ.த(சா/தர)ப் பாடசாலையை **2015**ஆம் வருடம் **1C** பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு க.பொ.த(உ/தர) பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைந்து பல்கலைக்கழகம் முடித்து பட்டதாரிகளாக உள்ளனர். இன்னும் மாணவர்களின் கற்பித்தல் செயற்பாடுகளை அதிகரிக்கும் வகையில் சில நபர்களின் உதவியைப் பெற்று **Multimedia** உபகரணத்தைப் பொருத்தி பாடசாலையில் பல்லூடக அறையை **(Multimedia Room)** உருவாக்குவதற்கு அல்லாஹ்த ஆலா ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தான். அத்துடன் பாடசாலையின் பெற்றாரும் எனது உறவினருமான **Mr.MHM.** றஸ்ஸாக் ஹனீபா அவர்களின் உதவியினால் **50** இஞ்சி **Smart LED TV** ஒன்றைப் பெற்று, **GMMS** பாடசாலை அறை ஒன்றில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலமும் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அத்துடன் இடைநிலை மாணவர்களின் மலசலகூட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மாகாண கல்வித் திணைக்களம் ஒதுக்கிய இரண்டு மில்லியன் ரூபாவுக்கான வேலைகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளது.

***கல்வித் துறைக்கு அப்பால் உங்களது ஆன்மீக துறை பற்றி கூறுங்கள்***

எமது நாவிதன்வெளி பகுதியில் முதலாவது மௌலவியாக நான் வெளியாகியமை குறிப்பிடத்தக்கதாகும். **5**ஆம் கிராமம் அல்மஸ்ஜிதுஸ் ஸபூரிய்யா, சென்றல்கேம்ப் அல் மஸஜிதுல் முஹம்மதிய்யா, **12**ஆம் கிராம ஜும்ஆப் பள்ளிவாசல்கள், **6**ஆம் கிராமம், வீரத்திடல் **4**ஆம் கிராம ஜும்ஆப் பள்ளிவாசல்களில் பேஷ் இமாமாக கடமையாற்றிதுடன் சென்றல்கேம்ப் சவளக்கடை பிரதேச அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளேன். இக்காலப் பகுதியில் சென்றல்கேம்ப் சவளக்கடை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவராகவும், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அம்பாறை மாவட்டத்திற்கு பிரதேசப் பொறுப்புதாரியாகவும் பல வருடங்கள் பணியாற்றியுள்ளேன்.

***உங்களது சமூகப் பணி பற்றி கூறுங்கள்***

இப்பிரதேசத்தின் தேவைகளை பல அறபு **NGO**க்களின் உதவியுடன் இரண்டாம் வட்டாரத்தில் ஜுவைத் தக்கியாப் பள்ளிவாசல், **5**ஆம் கிராமத்தில் முஹ்ஸின் தக்கியாப் பள்ளிவாசல், சென்றல்கேம்ப் வைத்தியசாலை தக்கியாப் பள்ளிவாசல் அமைப்பதில் முன்னின்று செயற்பட்டவன். மற்றும் பள்ளிவாசல்களில், பொது இடங்களில் பொதுக்கிணறுகளை அமைத்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்துகொடுத்திருக்கின்றேன். அத்துடன் **1989**ஆம் ஆண்டு மௌலவிப் பட்டம் பெற்று வந்தவுடன் ஸாஹிறா அஹதிய்யாப் பாடசாலையின் அதிபராக கடமையாற்றயதுடன் அம்பாறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் பிரதேச பொறுப்புதாரியாக இருந்து வேலைப்பளு காரணமாக அப்பொறுப்புகளை வேறு நபர்களிடம் ஒப்படைக்கவேண்டியேறபட்டது. மேலும் **YMMA** சென்றல் கேம்ப் **(Y97)** அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றேன்.

உங்களது சமூகப் பணி இன்னும் தொடர வேண்டும் என நாவெளி பத்திரிகை சார்பாக வாழ்த்துகிறோம்.

**தொகுப்பு;**

**ஏ.எல்.எம்.ஷினாஸ், ஏ.ஏ.அஸீம்,**
**என். நீலேந்திரன்**